விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (25.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சமனிலையை அறிமுகப்படுத்த இந்திய அரசு முயற்சித்தது!



## மன்மோகன் சிங் ஜனாதிபதிக்கு கடிதம்

*(புதுடில்லி),* ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்க அனுசரணையுடன் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையில் 'சமனிலையான அம்சங்களை' அறிமுகப்படுத்துவதற்கு இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே மன்மோகன் சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். *(23ஆம் பக்கம் பார்க்க)*

## பொலிஸ் வான் மோதி குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மாலை இடம் பெற்ற விபத்தொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். வவுனியா நகரில் உள்ள மணிக்கூட்டுச் சந்தியில் நேற்று மாலை இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

வீதியின் குறுக்கே மஞ்சள் கடவையால் சென்று கொண்டிருந்தபோது வேகமாக வந்த ஓமந்தை பொலிஸ் நிலைய வாகனம் மோதியதால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நிலையில் பிரஸ்தாப நபரை பொலிஸார் *(23ஆம் பக்கம் பார்க்க)*

## இந்தியக் குழுவின் விஜயத்துக்கு அனுமதி கிடைப்பதில் சந்தேகம்!

### இலங்கையுடன் தொடர்பு கொள்ளவும் தயக்கம்

(புதுடில்லி)

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக விஜயம் செய்யவிருந்த இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்குமா என்பது தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள்து.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்த நிலையிலேயே இச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள தமிழக காங்கிரஸ் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதேசிகன், இச் சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் உறுதியாக *(23ஆம் பக்கம் பார்க்க)*

## ஜெனிவாவில் மிரட்டியது இலங்கை அரசாங்கம்!

### நவநீதம்பிள்ளை குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக கொழும்பில் இருந்து சென்றிருந்த மனிதவுரிமை செயற்பாட்டாளர்களை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு மிரட்டியதாக ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள கொழும்பு ஆங்கில ஊடகமொன்று, இக் கூட்டத்தொடரில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, இலங்கையில் மனிதவுரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். *(23ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை மீதான தீர்மானம் சமாதானத்துக்கு வழிகோலும்

### மனித உரிமை அமைப்புகள் நம்பிக்கை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன வரவேற்றுள்ளன.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை மீதான தீர்மானம் வழிகோலும் என சர்வதேச மன்னிப்புச்சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரான காலப்பகுதியிலும் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் திருப்தியளிக்கும் வகையில் அமையவில்லை என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் சாம் சபாரி தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான தீர்மானத்தை வடக்கிற்கும் தெற்கிற்கும் *(23ஆம் பக்கம் பார்க்க)*


## காளை மாட்டை வெட்டுவதற்குத் தடை

### பொலிஸ் பாதுகாப்பில் மாடு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை வெட்டப்படவிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான காளை மாட்டை வெட்டுவதற்கு தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கால்நடை பண்ணையில் ஏலத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காளை மாட்டை இன்று வெட்டுவதற்கு அதனைக் கொள்வனவு செய்தவர் தீர்மானித்திருந்தார். *(23ஆம் பக்கம் பார்க்க)*



## முரண்பாடு இல்லாத சமாதானம் இலங்கையில் ஏற்பட வேண்டும்

### கனேடியக் குழுவிடம் சமாதானக் குழு எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

முரண்பாடு இல்லாத சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும் என சமாதானத்திற்கும் நல்லெண்ணக்கத்திற்குமான குழு கனேடிய பாராளுமன்ற குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை வருகை தந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான கிறிஸ் அலெக்சாண்டர், இவென்னொன் வைற் உள்ளிட்ட கனேடிய பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர். *(24ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கு - கிழக்கு இணைப்பை மக்களே தீர்மானிக்க வேண்டும்

### கிழக்கு முதலமைச்சர் சந்திரகாந்தன் உரை

(கொழும்பு)

கிழக்கை வடக்குடன் இணைப்பதா இல்லையா என்பது குறித்து கிழக்கு மாகாண மக்களே தீர்மானிக்க வேண்டும். அதனை வட பகுதி அரசியல் தலைமைகள் தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்குக் கிழக்கு இணைப்புக் குறித்து தமிழ்த் தேசியக் *(23ஆம் பக்கம் பார்க்க)*

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## ஹெரோயின் வைத்திருந்தவர் சிறைச்சாலையில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு ஹெரோயின் போதைப் பொருள் கொண்டு சென்ற நபர் ஒருவர் சிறைக் காவலர்களால் கைது செய்யப்பட்டார்.

200 கிராம் வரையான ஹெரோயின் போதைப்பொருள் இவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர் நேற்று யாழ். நீதவான்மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ-6)


## விற்பனைக்கு

புறஜெக்ரர்,
விரிவுரைக் கதிரைகள் புதியவை
குசன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0786722209
(8004)

சேவை முகவர்
காணிகள், வீடு விற்பனைக்கு
யாழ். கச்சேரி A9 5, பலாலி வீதி 3 1/2, மணல்தறை லேன், நுணாவில் தென்னந்தோட்டம் 21 பரப்பு.
V. சுந்தரம்
0774819801 (C-6164)

சாகித்தியன் போன் சொப் & நெற்கபே

எமது போன் சொப் நிறுவனத்திற்கு கணனி அறிவுள்ள ஓரளவு படித்த கரணவாய் குஞ்சர் பகுதியில் வசிக்கும் பெண் பணியாளர் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
எமது சேவைகளாக போன் திருத்துதல், விற்பனை, போன் Software, Lock உடைத்தல், போட்டோ கொப்பி, Net browsing.
தொடர்புகளுக்கு:- பருத்தித்துறை வீதி, குஞ்சர் கடை. (7764)
T.P:- 021 2262944


## விக்கிரகம் திருட்டு

(காரைநகர்)

காரைநகர் களபூமி கன்னை பிள்ளையார் ஆலய எழுந்தருளி விக்கிரகம் நேற்று திருடப்பட்டுள்ளது. சுமார் 150 வருட கால இவ் விக்கிரகம் நேற்று மதியமளவில் திருட்டு போயிருக்கலாம் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (எ-246)


காணி விற்பனைக்கு
திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அண்மையில் உள்ள கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு :- 0773434686 (8005)

விற்பனைக்கு
தரம் 1 தொடக்கம் 11 வரையான பாடசாலை மாணவர்களுக்கான கணிப்பீட்டு அறிக்கை விற்பனைக்குண்டு.
(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கானது)
நாடவேண்டிய இடம்:
எஞானம்ஸ் பிறிண்டேஸ்
கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P:- 0777164613 (8002)

ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா?
உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை
23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!
பெண்களுக்கான மாதப்பிரச்சனை,
கருமுட்டை உற்பத்தியின்மை,
வளர்ச்சியின்மையால் பாதிப்பா?
தாம்பத்தியக் குறைபாடா?
கவலை வேண்டாம்.



தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமயான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.
பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)
செல்: 0091 9842457673
100% உறுதி மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.
யாழ் வருகை 25.03.2012 காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை டாக்டரை நேரடியாக சந்திக்கலாம்.
Website: www. Sexualproblem.in
செல் : 0091 9600336009



Email: sridevisiddha@gmail.com
இலங்கை செல்: 0754 518 639
ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமபுரம், சென்னை-89, இந்தியா.
APGraphic

செல்லா சினிமா-யாழ்ப்பாணம்



பல தடைகளைத் தாண்டி
17.03.2012 முதல்
10.30, 02.30, 06.30, 09.30,
ஆக்ஷன் கிங் அர்ஜூன், ரிச்சா, கபாலி நடித்த
மாசி DTS
(C-6099)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
March 2012 to August 2012
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.03.2012

வாடிக்கையாளர் அனைவருக்கும் சித்திரை புதுவருட நல்வாழ்த்துக்கள்!
உங்கள் வீட்டு திருமணத்தை சரவணாவின் பட்டுசேலைகளால் அலங்கரியுங்கள்
சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு சரவணா ரெக்ஸ் கிளைகளில் அழகிய புத்தம் புதிய ஆடைகளை அதிக விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்
சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்குமான ஆடைகளை புத்தம்புதிய தெரிவில் பெற்றுக் கொள்ள
சரவணா ரெக்ஸ்
புது வருடத்தை முன்னிட்டு 7 நாட்களும் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை வியாபாரம் நடைபெறும்
தித்திக்கும் சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு சரவணா ரெக்ஸ் கிளைகளில் வாங்கும் ஒவ்வொரு ஆடைகளுக்கும் அதிக விலைக்கழிவு வழங்கப்படும்.
(வங்கி கடன் அட்டைகள் மூலமும் கொள்முதல் செய்யலாம்)





சரவணா ரெக்ஸ்

யாழ் நகரில்....
770, 772, கே.கே.எஸ்.வீதி,
(துட்டாதெருச் சந்தி),
யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 021 222 0421



நல்லூரில்....
5?6, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 1723



வடமராட்சியில்....
இல. 171, பிரதான வீதி,
நெல்லியடி (சம்பத் வங்கி அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 226 2992
(C-6161)

# வடக்கில் மருத்துவ சேவையில் ஒரு மைல் கல்

80 படுக்கைகளுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட மருத்துவ நிலையம்



1979

இன்று ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக
யாழ். மக்களுக்கு சமர்ப்பணம்



2012

Northern Central Hospital

*for a healthier tomorrow*

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Web: www.nchjaffna.com
Email: nchjaffna@gmail.com

## NORTHLANKAIIT & ISLES INTERNATIONAL UNIVERSITY

JAFFNA, SRI LANKA — இணைந்து வழங்கும் UK, IRELAND, MALAYSIA, KENYA & ST.KITS & NEVIS

# மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

## விண்ணப்பித்துவிட்டீர்களா!!!

வெல்லுங்கள்!

10 % முதல் 70 % வரை கற்கைநெறிக் கட்டணம் Free!

COURSES:- 5 வது Batch இல் இணையுங்கள்!

B.Sc. in Computer Science — Duration: 1 ---- 3 Years
B.Com with Computer App. — A/L / O/L
P.G.Dip. in Comp. Sc. >> M.Sc. — Duration: 1 Year Any Degree
MBA >> DBA — Duration: 1 ---- 3 Years Any Degree

PG Diploma MBA, M.Sc. 2 வது Batch இல் இணையுங்கள்!

நீங்கள்.. ஏதேனுமொரு துறையில் HND OR Advanced Diploma OR IT துறையில் 2 வருட கற்கைநெறியைப் பயின்ற தகமையுள்ளவரா?

ஒரு வருடத்தில் B.Sc. கணிப்பட்டத்தினை அல்லது B.Com. with Computer Application பெற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு!

சர்வதேச தரம் வாய்ந்ததென்று எச் சந்தர்ப்பத்திலும் நிருபித்துவரும் பட்டச்சான்றிதழ்கள்

இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். UGC

எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்

## NORTH LANKA IIT

#113, NAVALAR ROAD, JAFFNA. Phone: 021 567 7774



## சாந்தம் வைத்தியசாலை

யாழ் மண்ணில் ... புதிய உதயம் ...

## எமது சேவைகள்!

OPD - காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை





IPD
X - RAY
ECG
COLOUR SCANNING
PHARMACY
MODERN MEDICAL LABORATORY
AMBULANCE
SPECIALIST VISIT









Dr.S.Raviraj (Consultant Surgeon) @ Santham Hospital Opening Ceremony



விசேட பொது வைத்திய நிபுணர் - VP
விசேட மகப்பேற்று நிபுணர் - VOG
விசேட சத்திரசிகிச்சை நிபுணர் - SURGEON
விசேட தோல்வைத்திய நிபுணர் - SKIN SPECIALIST
விசேட கண் வைத்திய நிபுணர் - EYE SURGEON
விசேட காது, மூக்கு, தொண்டைவைத்திய நிபுணர் - ENT SURGEON
குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர் - PEADIATRICIAN

மேற்படி வைத்திய நிபுணர்களின் சேவையை முற்பதிவ செய்து பெற்றுக்கொள்ளலாம்.







HOME VISIT — உங்கள் அன்புக்குரியவர்கள் நடமாட முடியாது இருந்தால் அவர்களுக்கு நாங்கள் உங்கள் வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிப்போம்.

## SANTHAM HOSPITAL

No.126 , 3rd Cross Street, Jaffna

Tele Phone: 021 56 777 56, 021 56 765 77

Hotline: 077 376 7044

# முல்லைத்தீவு ஆசிரியர்களுக்கான விசேட போக்குவரத்துச் சேவை

யாழ்.மாவட்டத்திலிருந்து துணுக்காய் கல்வி வலயத்திற்கு கடமையாற்ற செல்லும் ஆசிரியர்களுக்கான விசேட போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண விளையாட்டுத்துறை கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து வாரம்தோறும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய அதிகாலை 5.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையம் மற்றும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து பாண்டியன்குளம், மல்லாவி, துணுக்காய் ஆகிய பிரதேசங்களுக்கும் ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, கூழாமுறிப்பு ஆகிய பிரதேசங்களுக்கும் பேருந்து சேவைகள் இடம்பெறும்.

சேவையில் இரு பேருந்துக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன. யாழ்.மாவட்டத்திலிருந்து புறப்பட்டு மாங்குளம் சந்தி வரை பயணித்து அங்கிருந்து குறிப்பிட்ட பிரதேசங்களுக்குப் பயணத்தை மேற்கொள்வதோடு ஆசிரியர்கள் மாங்குளம் சந்தியிலிருந்து தாங்கள் செல்லும் இடத்திற்கேற்ப தங்கள் பயணப் பாதையினையும் மாற்றிக்கொள்ளமுடியும்.

அத்துடன் வெள்ளி பிற்பகல் மேற்படி வலயங்களிலிருந்து யாழ்.நகருக்கும் பருத்தித்துறைக்கும் பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாசையூரில் வாள்வெட்டு சம்பவம் ஐந்து பேர் கைது; ஒருவர் காயம்

ஆட்டோவில் வந்தவர்களினை இடைமறித்து வாளினால் வெட்டிய பாசையூரினைச் சேர்ந்த 5 இளைஞர்களை யாழ்.பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.பரியோவான் கல்லூரிக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஆட்டோ சாரதி உட்பட மூவர் ஆட்டோவில் பயணித்துக்கொண்டிருந்தபோது திடீரென் வேறொரு ஆட்டோவில் வாள்களோடு வந்த நபர்களால் குறித்த மூவரும் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் தனியாக மாட்டிய பாசையூரினைச்சேர்ந்த றெ.றெக்னோல்ட் (வயது 22) வாள்வெட்டுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து நேற்று வாள்வெட்டில் ஈடுபட்ட பாசையூரினைச் சேர்ந்த 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தாக்கப்பட்டவர்களும் தாக்கியவர்களும் ஒரேயிடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இத்தாக்குதல் விளையாட்டு நிகழ்வின் விளைவாகவே ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இவ்வாறான சம்பவங்கள் இப்பகுதியில் தினமும் நடைபெறுவதாகவும் அவர்களை நாம் தொடர்ந்து கைதுசெய்கின்றபோதும் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)




உங்கள் முன்னேற்றத்தின் ஊண்டுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

முறைப்பாடு மற்றும் முன்மொழிவுகளுக்கு மேலே உள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளுங்கள்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்


www.nationstrust.com

Nations Trust Bank PLC - PQ 118


Nations Trust Bank
Nations Leasing

(சி-6160)


# மூன்றாம் ஆண்டு நினைவுநாள்



பிறப்பு 2000.07.12 **துளசிகன்** இறப்பு 2009.03.25



பிறப்பு 2004.04.05 **டனுசிகா** இறப்பு 2009.03.25



**கலையழகன்**
பிறப்பு 1978.03.02 இறப்பு 2009.03.25
குமுழமுனை மகா வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர்

**பிரவினா**
பிறப்பு 2007.09.03 இறப்பு 2009.03.25



பிறப்பு 1980.09.12 **கருணைக்கனி** இறப்பு 2009.03.25

**நீங்கள் ஆசிரிய பணிவிட்டு!**

அண்ணன் மகள் பிரவினாவும் தங்கை
கருணைக்கனியும் பிள்ளைகள்
துளசிகன், டனுசிகா ஐவருமாக ஒரே
நாளில் எங்கே சென்றீர்கள்?

மூன்று ஆண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் பிரிவால் வாடும்

**உறவினர்கள்**

முள்ளியவளை,
முல்லைத்தீவு.

(சி-6148)

# நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் இந்துசமய மேம்பாடு கருதிய ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது.

இந்நூல்கள் பொதிகளாக்கப்பட்டு ஒவ்வொரு நூல் தொகுதியும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் பொது நூலகங்களுக்கும் சனசமூக நிலைய ஊடகங்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

இந்நூல் தொகுதியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பல்கலைக்கழகங்கள், பொது நூலகங்கள், சனசமூக நிலையங்கள், உயர்தரப் பிரிவைக் கொண்டுள்ள அரச பாடசாலைகள் என்பவற்றின் நூலகர்கள் அல்லது பொறுப்பாளர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

நூலகப் பொறுப்பாளர்கள் நூலகத்தின் பெயர், முகவரி, நடத்தும் நிறுவனத்தின் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தமது பதிவு முத்திரையுடன் கூடிய சான்றுப்படுத்தலுடனும் பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர் விண்ணப்பத்தை உறுதிப்படுத்தியும் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு- 04 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இத்தொகுதி நூல்கள் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்படும் ஒரு வைபவத்தின் போது கொழும்பில் வைத்து வழங்கப்படும் என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார். (அ)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை, 28 ஆம் திகதி புதன்கிழமை, 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இணுவில், உப்புமடம், கோண்டாவில், சுதுமலை, புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை, 29 ஆம் திகதி வியாழக்கிழமை, 31 ஆம் திகதி சனிக்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, மூடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடப் பிரதேசம், ஆடிய பாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை கச்சேரிப் பிரதேசம், அரியாலைப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் அறிவித்துள்ளார். (அ)

## வடமராட்சி கிழக்கு கேவில் வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

பருத்தித்துறையில் இருந்து வடமராட்சி கிழக்கு கேவில் வரைக்குமான போக்குவரத்துப்பாதை பல வருட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது.

இதனால் போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பாதையூடாக பேருந்துகளில் செல்லும் பயணிகள் வாகனம் செலுத்தப்படும் போது எழுப்பும் கிரவல் தூசுகளால் உடலும் உடையும் அழுக்கடைந்த நிலையில் பயணத்தை நிறைவு செய்ய வேண்டிய நிலை உள்ளது.

இதனால் பல நோய்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதனை விட பயணத்தின் நிமிர்த்தம் பல மணி நேரம் பயணம் செய்தே தாம் செல்லும் இடத்தை அடைய வேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வூதியூடாக பயணிக்கும் பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதாகவும் பயணிகள் விபத்துக்குள்ளாவதாகவும் உள்ளது.

எனவே, இது தொடர்பாக வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திகள் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் மக்களால் கோரிக்கை வைக்கப்பட்ட போதும் இதுவரை காலமும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-3-64)

## அறிவாலய திறப்பு விழா

பொற்பதி அறிவாலயத்தின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள பொற்பதி அறிவாலயத்தில் தீவக வலய கணனி வள முகாமையாளரும் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக தலைவருமான பா.பாலமகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினராக வடமாகாண முன்னாள் சித்த மருத்துவத்துறை பணிப்பாளர் பேராசிரியர் சு.பவானி, யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலை தகைசால் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், நல்லூர் பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

## வாரம் ஒரு தகவல்

### தவறும் தண்டனையும்!

"உலகம் மிகவும் கெட்டுப் போய் விட்டது சேர்!"

"என்ன சேர்... இப்படி ஒரே தடவையில் சொல்லிவிட்டீர்கள்?"

"பார்த்தீர்கள் தானே பத்திரிகைகளிலே?"

"ஒரு ஊரிலே சிறையிலே இடம் இல்லாமல் கைதிகளை விடுதலை செய்திருக்கிறார்கள்!"

"எந்த ஊரிலே சேர்?"

"ஜிம்பாவே- சிறைகளிலே கைதிகள் அதிகரித்து விட்டார்கள். இடப்பற்றாக்குறை ஏற்பட்டதாம்!"

"சிறிது யோசித்த அரசாங்கம் ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்புக் கொடுத்து வெளியேற சொல்லிவிட்டார்கள். அத்துடன் தண்டனைக் காலத்திலே நான்கில் ஒரு பங்கை அனுபவித்தவர்கள் 6 ஆயிரம் பேரையும் விடுதலை செய்து விட்டார்கள்!"

"பரவாயில்லை சேர் இது! இன்னும் சிறிது காலம் சென்றால் இன்னொரு காரியம் கூட செய்வார்கள் என்று நினைக்கின்றேன்!"

"எப்படி?"

"தவறு செய்தவர்களையெல்லாம் வெளியிலே விட்டுவிடுவார்கள்! நல்லவர்களையெல்லாம் பிடித்து உள்ளே தள்ளி விடுவார்கள்! இப்படிச் செய்தால், இடநெருக்கடி இரண்டு விதத்திலேயேயும் அதிகமாக இருக்காது!"

"எமது ஊர்களிலேயெல்லாம் அந்த அளவிற்கு வருமென்று நான் நினைக்கவில்லை!"

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நேற்று இரவு கூட எங்கள் வீட்டுக்கு திருடன் வந்து விட்டான்!"

"ஐயோ பின்னர் என்ன நடந்தது?"

"நான் முழித்து கொண்டு கத்துவதற்கிடையில் அவன் திருடிக் கொண்டு ஓடிவிட்டான்"

"உங்களிடம் தான் ஸ்கூட்டர் இருக்கின்றதே... கலைத்துக் கொண்டு போயிருக்கலாமே!"

"அது எப்படி முடியும்?"

"ஏன்?"

"அவன் திருடிக் கொண்டு போனது அதைத்தான் சேர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

25.03.2012
(பங்குனி 12, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
திருதியை பின்னிரவு 2.08 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 5.36 மணிவரை
இராகுகாலம் 4.45-6.15 மணிவரை
சுபநேரம் 9.15-10.45 மணிவரை
செல்லப்பா சுவாமிகள் குருபூசை.

**மேடம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கலாம், வேலைச்சுமை கூடும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு படுத்திக் கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்** குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலருக்காக ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணவரவுகள் எதிர்பார்த்தபடியே கிடைக்கும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், பெருமை கொள்ள வேண்டிய நாள்.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், கடின உழைப்பில் ஈடுபடுவீர்கள், மற்றவர்கள் கீழ்ப்படிந்து நடப்பர், கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்** ஆன்றோர் சந்திப்புண்டு,சாமர்த்தியமான பேச்சால் சாதனை படைக்கும் நாள், தேவையற்ற பயம் ஏற்படலாம், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பொது நலனில் ஈடுபடும் போது மற்றவர்களின் அதிருப்திக்கு உள்ளாக நேரிடலாம்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், போசன சுகமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**விருச்சிகம்** எதிரிகள் விலகுவர், பாதியில் நிறை வேலையை மீண்டும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புத்தி சாதுரியமாக செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**மகரம்** வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பயந்த சுபாவமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இனிமை சேரும் நாள், தாய் வழி உறவில் நன்மையுண்டு.

**கும்பம்** பொன்னான நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், அந்நியர் சந்திப்புண்டு போசன சுகமுண்டு.

**மீனம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது நல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் ஏற்படும், குடும்பக் கவலைகள் மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 65 |
| பச்சைமிளகாய் | 35-40 | 20 | 35 |
| தக்காளி | 10 | 30 | 10 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15-20 | 10 | 25 |
| கரட் | 35-40 | 30 | 40 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 25 | 40 | 20 |
| வாழைக்காய் | 30 | 20 | 35 |
| சின்ன வெங்காயம் | 50-60 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 75 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 |
| கரணைக்கிழங்கு | -- | 70 | -- |
| பயற்றங்காய் | 80-90 | 80 | 60 |
| லீக்ஸ் | 50 | 70 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 200-250 | 250 | 200-400 |
| போஞ்சி | 40 | 70 | 40 |
| கத்தரி தம்புள்ள | 35 | 50 | 35 |
| கீரை - 1 பிடி | 8-12 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 30 |
| வெங்காயப்பூ | -- | 70 | -- |

# தெய்வீகத் தன்மையின் ஆறு சிறப்பு இயல்புகள்



ஆன்மீகம் 16

புஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

**3. எட்டு வகைச் செல்வங்கள்**

தெய்வீகத்தன்மையின் மூன்றாவது சிறப்பு இயல்பு, எல்லாவிதமான செல்வங்கள் உலகில் தோற்றுவிக்கப்பட்டவற்றிலேயே மிகப்பெரிய மாயை செல்வம்தான். தர்க்க ரீதியாகப்பார்த்தால், அது உன்னுடன் உன் முயற்சியால் வந்ததுபோல் தோன்றும். ஆனால், அது உனக்கு அளிக்கப்பட்டுள்ளது. உலகில் உள்ள வேறுபாடுகளைச் சற்றுப்பார். ஏன் ஒருவர் ரஷ்யாவில் பிறக்க வேண்டும்? ஏன் ஒருவர் அமெரிக்காவில் பிறக்கவேண்டும்? ஏன் அவர்கள் எல்லோரும் செல்வநிலையில் மாறுபட்டிருக்கிறார்கள்?

கம்யூனிஷ்டுகள் இதைப்பற்றி நெடுங்காலம் சிந்தித்தார்கள். கம்யூனிசத்தின் அடிப்படையிலேயே எல்லோரும் சமமான செல்வ நிலையில் இருக்கவேண்டும் என்பது தான்.

ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. எல்லாரும் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால், அந்தக் கொள்கை பரிதாபமாகத் தோல்வியடைந்தது. அந்தத் கொள்கையை தர்க்க ரீதியாகப் பார்த்தால், துல்லியமானது; அற்புதமானது என்றுகூட சொல்லலாம். ஆனால், நடைமுறையில் அது சாத்தியப்படவில்லை. மார்ஸ்க், லெனின் இருவரும் தங்கள் கல்லறையிலிருந்து எழுந்து வரநேரிட்டால், அவர்கள் நடந்திருப்பதைப்பார்த்து பயங்கர அதிர்ச்சி அடைவார்கள். அவர்கள் முழு பொதுவுடமைத்துவத்தையும் திரும்ப எழுதுவார்கள்.

ஏன் ஒருவர் ஆஸ்திரேலியாவில் பிறந்து ஒரு துண்டு ரொட்டிக்குத் திண்டாடவேண்டும். மற்ற இடங்களில் ரொட்டிகள் கொட்டிக்கிடக்கின்றன- குப்பையில் வீசப் படுமளவுக்கு? ஏன் சில நாய்கள் வீட்டில் வளரும் சுகத்தை அனுபவிக்கின்றன? ஏன் சில நாய்கள் தெருக்களில் அலைகின்றன? இவற்றிற்குத் தர்க்கரீதியாக எந்தக்காரணமும் இல்லை.



செல்வம் என்பது உனக்கு அளிக்கப்படுவது; செல்வங்களில் எட்டு வகை உண்டு.

*1 பொருட்செல்வம்*

முதல் வகைச் செல்வம்- நாம் செல்வம் என்றால், சாதாரணமாகப் புரிந்து கொள்ளும் செல்வம் பொருட் செல்வம். சிலர் பணக்காரக் குடும்பங்களில் பிறக்கிறார்கள். சிலர் சாதாரண வசதியற்ற குடும்பங்களில் பிறக்கிறார்கள். போர்டு குடும்பத்தில் பிறந்தாலேயே, ஒருவர் எந்த முயற்சியும் இன்றி அவ்வளவு செல்வத்தையும் அடைகிறார்கள். மற்றொருவர் பணம் சம்பாதிக்க வாழ்க்கை முழுவதும் உழைக்க வேண்டியுள்ளது. இது ஏன் இப்படி நடக்கிறது. இது ஒரு பெரிய கேள்வி இல்லையா? ஏன் சிலருக்குப் பரம்பரை சொத்துக்கிடைக்கிறது? ஏன் சிலருக்குக் கிடைப்பதில்லை?

இளைய தலைமுறையினர் பெற்றோர்களைக் குற்றம்சாட்ட ஆரம்பிக்கிறார்கள். என் அப்பா, அம்மா எனக்கு எதையும் விட்டுச் செல்லவில்லை. அவர்கள் குடித்தார்கள். கேளிக்கைகளில் ஈடுபட்டார்கள். எல்லாப்பணத்தையும் வாரியிறைத்தார்கள். எனக்கென ஒன்றுமில்லாமல்- முந்தைய தலைமுறை மேல் கோபம் வருகிறது; தங்களுக்கு எதையும் சேமித்து வைக்காததற்காக இது நடக்கிறது இல்லையா?

பொருள் செல்வம் முதல் வகைச் செல்வம்.

**2. ஆரோக்கியம்**

வெறுமனே பணம் மட்டும் இருந்தால் போதாது. சிலரிடம் நிறைய பணம் இருக்கும்; ஆனால், சாப்பிட முடியாது. அல்லது சாப்பிட நேரமிருக்காது. அவர்களுக்குச் நீரிழிவு நோயோ, இரத்த அழுத்தமோ, இருக்கும். அவர்களால் தங்கள் ருசிக்கேற்ற உணவைச் சாப்பிட முடியாது. வயிற்றுப்புண், நீரிழிவு நோய் இருந்தால், மிகமிக கவனமாக இருக்கவேண்டும். சிலருக்கு அலங்கரிக்கப்பட்ட அழகான வீடுகள் இருக்கும். உயர்ந்த படுக்கை இருக்கும். ஆனால், அவர்கள் தூக்கமின்மையால் அவதிப்படுகிறார்கள். இந்த செல்வத்தால் என்ன பயன்?

ஆகவே, இரண்டாவது வகைச் செல்வம் ஆரோக்கியம். சிலரிடம் பணம் இருக்காது. ஆனால், அவர்களுக்கு நிறைய தானியங்கள் கிடைக்கும். நிறைய உணவு இருக்கும். யார் அங்கே போனாலும் அவர்களுக்கு உணவு கிடைக்கும். இந்தியாவில், பல விவசாயிகளிடம் போதிய பணம் இருக்காது. ஆனால், அவர்களால் முழு நகரத்துக்குமே சாப்பாடு போடமுடியும். நன்றாகத் தூங்க முடியும்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 16

சக்தி

**சூரிய ஆதிக்கம்**

சூரிய ஆதிக்கம் உள்ளவர் பார்ப்பதற்கு கம்பீரமான தோற்றம் உடையவர். குரு, சனி ஆதிக்கம் உள்ளவர்கள் இருக்கும் உயரத்தில், அவர் நடுத்தரமான உயரம் உடையவர். அவர் குரு ஆதிக்கம் உள்ளவரைப் போல் ஒற்றை நாடியுடையவராய் இரார். தேகப் பயிற்சி செய்பவரைப்போல் அவருக்கு சதை கெட்டியாய் இருக்கும். அவருக்கு நெற்றி அகலமாயும் கண்கள் விசாலமாயும் இருக்கும். அவர் கண்ணொளி கடபமற்ற தன்மையையும், காருண்ணியம் ததும்பும் தன்மையையும் காட்டும். அவருடைய முகத்துக்கு ஏற்றவாறு அவர் மூக்கு நீண்டு அழகுடன் விளங்கும்.


அவர் ஒரே மாதிரியான நிதானமும், கம்பீரமான நடையையும் உடையவர். சூரிய ஆதிக்கத்துக்கு இது ஒரு முக்கியமான அடையாளம். இத்தகையோருக்கு முகத்தில் வசீகரம் ஜொலிப்பதால், இவர்கள் அழகான வஸ்துகளை விரும்புவதும், முன்னேற்றத்தில் பெருந்தன்மையான எண்ணமுமே இருப்பதும் இவர்களுக்கு இயற்கை என்பதை அறிய வேண்டும். இவர்கள் கையில் சூரிய மேடு உப்பலாய் (உயரமாய்) அமைந்திருப்பதுடன் அதில் ரேகையும் இருந்தால், அது இவர்களுக்குண்டாகும் கீர்த்தியையும் செல்வத்தையும் குறிக்கும். சூரிய மேட்டிலுள்ள ரேகை அதிர்ஷ்டத்தைக் குறிப்பதால், அக்காலத்தில் கீர்த்தியுண்டாவதையும் பொருள் பொங்குவதையும் அது தெரிவிப்பதாகும்.

சூரிய ஆதிக்கமுள்ளோர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பல துறைகள் வழியாயும் பொருள் தானே அவர்களிடம் வந்து குவியும். அதனால், அவர்கள் பூமகளின் புத்திரராய் விளங்குவார்கள். செல்வாக்கு மிகுந்த சூரிய ஆதிக்கம் உடையோருக்கு பெருஞ்செல்வமும் புகழும் சேராவிடில் வேறு எவருக்குச் சேரும்? எனவே, சூரிய ஆதிக்கம் உடையோரே எல்லா நன்மைகளும் பெறப் பொருத்தமானவர்கள்.

## ரேகைகளும் கிரகங்களும்

சூரிய ஆதிக்கம் உள்ளவர் அதிநுட்ப அறிவையுடையவராவார். மற்றவர்களைவிட அவர் வெகு தீவிரமாய் விடயங்களைத் தெரிந்து கொள்வார். முக்கியமாய் அவர் கல்வி கேள்விகளிற் கூரிய புத்தியுடையவராவார். அவர் அதிக சிரமம் இல்லாது எதையும் எளிதில் அறிந்து கொள்வார். தாம் கண்டது சொற்பமேயானாலும், அதைவிரிவாய் எடுத்துரைப்பதில் எவரும் அவருக்கு ஈடாகார்கள். அவரின் ஆராய்ச்சி அனுபவம் மிகவும் ஆச்சரியமானதாகும். இதனால் அவரின் விடயங்களை அதிநுட்பமாகக் கிரகித்துக் கொள்வார். அவர் தானே ஒன்றைச் செய்யக்கூடியவர். ஒன்றைப் பார்த்து அதைப் போல வேறொன்று செய்வதில் அவர் சமர்த்தராய் இருப்பார். பழைய பொருட்களை நூதன முறையில் புதுப்பித்து விடுவார். இத்தகையோர் எந்தக்கூட்டத்தில் இருந்தபோதிலும் இவர்கள் சபாரத்தினமாய் விளங்குவார்கள். இவர்கள் சாஸ்திர ஆராய்ச்சி, பொருளாட்சி முதலிய எத்துறை ஆராய்ச்சியில் புகுந்தாலும், பிறருடன் கலந்து ஒத்துழைப்பார்கள். இவர்கள் முன்அனுபவம் இல்லாமலேயே வைத்தியர். வைதீகர். வக்கீல் முதலியோர்களிடமும் மற்றும் இராஜீய தேசியவாதிகளுடனும் கலந்து எல்லாம் தெரிந்தவர்கள் போல வேலை செய்வார்கள். இவர்களின் இத்தகைய பிரசித்திக்கு அகண்டாகார அறிவே காரணமாகும்.

இவர்கள் நூல் ஆராய்ச்சியின்றியே விடயங்களைத் தொகுத்துப் பேசக் கூடியவர். இதனால் இவர்களை எல்லா மக்களும் விரும்புவார்கள். அழகான கண்காட்சிகள் நல்லதோர் விருந்தாகும். நல்ல ஆடைகளையும் அழகுள்ள பெண்களையும் கவனியாதிருக்க மாட்டார்கள். இவர்கள் இன்பமான வாழ்வையே விரும்புபவர்களாதலால், விசாலமான வீடு தோட்டங்களில் இருக்க ஆசைப்படுவார்கள். தங்கள் வீட்டை வெகு அலங்காரமாக வைத்திருப்பார்கள். இவர்களுக்கு மோதிர விரலின் முதல் அங்குலாஸ்தி நீளமாயிருந்தால், இவர்கள் காலத்துக்கு ஏற்ற நாகரிகத்தையும் பின்பற்றுபவர்களாயும் இருப்பார்கள். இவர்களுக்கு அவ்விரலின் மூன்றாம் அங்குலாஸ்தி நீளமாயிருந்தால், சீர்திருத்தமின்றியே பொருளைச் சேர்த்து வைப்பார்கள். இவர்களும் நல்லவர்களே. இவர்களும் திடகாத்திடம் உடையவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்குத் திடீரென மனமாறுதல் உண்டாகும். சிலரை




விரோதித்துக் கொள்ளும் சுபாவமும் இவர்களுக்கு இருக்கும். அவர்களை எதிரிகளாக ஆக்குவதினாலும் இவர்கள் பொறுமைக்காரர்களாகி விடுவார்கள்.

(தொடரும்)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை அருள்மிகு வேம்படி சித்தி விநாயகர் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

இன்று காலை 8 மணிக்கு மஹா கண பதி ஹோமம் நடைபெறும். எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அஷ்டோத்திர சகஸ்ட சங்காபிஷே கமும் மாலை 5 மணிக்கு விஷேட வசந்த மண்டப பூஜை இடம்பெற்று திருவூஞ்சல் பாடல் பாடப்பெற்று கிராம பிரதட்சணமாக விஷேட மேளக்கச்சேரியுடன் வெளிவீதி வலம் வருதலும் இடம்பெறும் என ஆலய நிர் வாக சபையினர் அறிவித்துள்ளனர்.(அ-2)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் ஆலய நூதன பஞ்ச தள சுந்தர இராஜகோபுர கும்பாபி ஷேக பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.18 மணி தொடக்கம் 11.07 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக கால கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி கிரியைகள் நடைபெற்று இன்று காலை 7 மணிக்கு பூஜைகள் நடைபெறும் என ஆலய நிர்வா கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# அரசாங்கம் எங்கு சென்றாலும் தோல்விகளையே சுமந்துவருகிறது

## தினேஷ்- தயாசிறி விவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதியோ அமைச்சர்களோ எங்கு சென்றாலும் தோல்விகளை சுமந்தவர்களா க்வே திரும்பி வரவேண்டியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி தயாசிறி ஜயசேகர கூறியதால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போதே இந்த சர்ச்சை ஏற்பட்டது.

அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் மைதானம் தொடர்பில் தயாசிறி ஜயசேகர எம்.பி கேள்விகளை கேட்டிருந்தார். இதற்கு அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்ச ருமான தினேஷ் குணவர்த்தன பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அதன்போது குறுக்கிட்ட தயாசிறி ஜய சேகர எம்.பி உலகக் கிண்ண கோப்பையை எமது அணியினர் கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்போட்டியை ஜனாதிபதி பார்வையிடச் சென்றார். கோப்பை பறிபோய் தோல்வியுடனேயே அவர் நாட்டு க்கு திரும்பினார். அதுபோல் சில நிகழ்வு களுக்கு அமைச்சர்கள் சென்றார்கள். அவர்க ளும் தோல்விகளையே சுமந்து வந்தனர்.

எமது நாடு தொடர்பான விடயங்கள், நிகழ்வுகள் எதற்கென்றாலும் ஜனாதிபதியோ, அமைச்சர்களோ சென்றால் அவர்கள் தோல்வி களையே சுமந்து வருகின்றனரே என்றார்.

இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கிரிக்கெட்டை ஜனாதிப தியோ, அமைச்சர்களோ விளையாடுவ தில்லை. வீரர்கள் தான் விளையாடுவார்கள். தோல்விகளுக்கு ஜனாதிபதியையோ, அமைச் சர்களையோ குறை கூறமுடியாது.

ஒரு சட்டத்தரணியான தயாசிறி ஜயசேகர எம்.பி தனது தாய்நாட்டை கேவலப்படுத் துகின்றார்.எமது தாய் நாட்டை பற்றி இவ் வாறு கூறுவதற்கு உங்களுக்கு வெட்கமில் லையா? எனக் கேட்டார். இதனையடுத்து இரு தரப்புக்குமிடையே சிறிது நேரம் சர்ச்சை இடம்பெற்றது. (அ-7)

## சட்டத்தரணி மீது பொதுமக்கள் தாக்குதல்

கோட்டே ரஜமஹா விஹாரையின் மீது தேரர்கள் இருவரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்க ளும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை மிரிஹான பொலிஸார் நுகேகொடை நீதவான் நீதிமன்றில் நேற் றைய தினம் ஆஜர்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 19 ஆம் திகதி சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்து மாறு இதன்போது நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை சந்தேக நபர்கள் சார்பாக பிரசன்னமாக முன்வந்த சட்டத்தரணி ஒருவர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ள னர். இது தொடர்பாக மிரிஹாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் தொலை தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேரு ந்து சாரதிகளுடனான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாநகர சபை முதல்வர் மாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.மாந கர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார். (அ)

## நாட்டில் வெளிநாட்டு முதலீடு 100கோடி டொலரை கடந்துள்ளது

### பிரதியமைச்சர் யாப்பா தெரிவிப்பு

வரலாற்றில் முதற்தடவையாக நாட்டில் வெளிநாட்டு முதலீடு 100கோடி டொலரைக் கடந்துள்ளது என்றும் 2010ஆம் ஆண்டை விட 2011இல் முதலீடு இருமடங்காக அதி கரித்துள்ளது என்றும் பொருளாதார அபி விருத்திப் பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அதன்படி 2011 ஆம் ஆண்டில் 516 மில்லியன் டொலராக காணப்பட்ட வெளி நாட்டு முதலீடு 2011 இல் ஆயிரத்து 66 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. நாட்டின் ஏற்றுமதி வருமானம் 27 சதவீதத் தால் அதிகரித்துள்ளது. அதன்படி 2010 இல் 5.175 மில்லியன் டொலராக இருந்த ஏற்று மதி வருமானம் 2011 இல் 6.571 மில்லிய னாக அதிகரித்துள்ளது.

இதேவேளை முதலீட்டு வலயங்களில் தொழில்வாய்ப்பும் 5.8 சதவீதத்தால் அதி கரித்துள்ளது. 2010 இல் 4 இலட்சத்து 26 ஆயிரத்து 84 ஆன இருந்த தொழிலாளர் கள் எண்ணிக்கை 2011 இல் 4 இலட்சத்து 50 ஆயிரத்து 913 ஆக அதிகரித்துள்ளது. அதன் படி கடந்த வருடம் தொழிலாளர் எண்ணி க்கை 24 ஆயிரத்து 826 ஆல் அதிகரித் துள்ளது. (அ-7)

## பொதுக்கூட்டம்

யாழ்.மாநகர சபையின் இவ்வாண்டுக் கான பங்குனி மாத மாதாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலை மையில் நடைபெறவுள்ளதாக மாநகரசபை செய்தியாளர் திருமதி ரு. சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ)

## எதிர்க்கட்சியினர் குறித்து கவலையடைகின்றேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித் திருந்த பிரேரணை தொடர்பான கலந்துரை யாடல் இடம்பெற்ற போது எதிர்க்கட்சி வடக்கி ற்கு சென்று கருத்துக்களை வெளியிட்டதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பிரேரணையை தோற் கடிப்பதற்காக நாட்டு மக்கள் ஒன்றிணைந் திருந்த போது எதிர்க்கட்சி இவ்வாறு செயற் பட்டமையானது கவலையளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.இதேவேளை இலங்கை க்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கு தாம் நன்றிகளை தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

### அறிவித்தல்

### திண்மக்கழிவகற்றல்


திண்மக் கழிவகற்றல் தொடர்பாக சமையலறைக் குப்பைகள் மட்டுமே எமது சபையால் அகற்றப்படும். மேலதிகமாக சேரும் உக்கமுடியாத வாழைக் குற்றிபோன்ற குப்பைகளுக்கு அந்தந்த உப அலுவலகங்களில் 500/= கட்டணம் செலுத்தும் பட்சத்தில் அக்குப்பைகள் எம்மால் அகற்றப்படும்.

மேலும் தங்கள் பகுதிக்குள் எமது உழவியந்திரம் வருகைதரும் தினத்தில் மட்டுமே சமையலறைக் குப்பைகளை உரிய முறைப்படி பையினுள் கட்டி வைத்து ஒத்துழைப்பினை வழங்கவும். உழவியந்திரம் சென்ற பின்னர் எக்காரணம் கொண்டும் குப்பைகள் தெருவோரத்தில் வைக்கப்படக்கூடாது. தங்கள் வீடுகளுக்கு முன்புறமாகவுள்ள தெருவோரங்களை தாங்களே துப்புரவு செய்து சுகாதாரம் பேணப்படவேண்டும். சுகாதாரம் பேணுவதன் மூலம் தற்போது பரவும் டெங்கு நோயிலிருந்து ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

தவிசாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

(சி-6156)


## முப்பது வருட கால யுத்தம் மனித உணர்வுகளை மழுங்கடித்துவிட்டது



### அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

(கொழும்பு)

கடந்த 30 வருட யுத்தச்சூழ்நிலையினால் சமூகம் மனிதாபிமான உணர்வுகளிலிருந்து தூரமடைந்துள்ளது. இதனால் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன் முறைகள் அதிகரித்துள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற் றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.எம்.பி சந்தானி பண்டாரநாயக்க முன்வைத்த ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்கு பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

யுத்தத்தினால் பெண்கள் மட்டுமன்றி சிறுவர்களும் இறந்தனர். பலர் அநாதரவானார்கள். இவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் பிரயத்தனமே ஜெனீவாவில் தோல்விய டைந்தது.

பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளதை ஏற்கிறோம். ஆனால் அமெரி க்காவில் 48 வீதமான பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்படுகின்றனர்.

5 ஆயிரம் பேர் சுவீடனில் பாலியல் வல்லுறவுக்கு இலக்காகின்றனர். பிரித்தானியாவில் 85 ஆயிரம் பாலியல் வல்லுறவுகள் இடம்பெற்றாலும் 800 பேரே தண்டிக்கப்படுகின்றனர். தென்னாபிரிக்காவில் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாலும் அது வெளியில் வருவதில்லை.

இந்தப் பாராளுமன்றத்தில் 17 பெண் எம்.பி.க்கள் உள்ளபோதும் 6 பேரே இந்த விவாதத்தில் கலந்துகொள்கின்றனர். சகல பெண் எம்.பி.க்களும் கலந்து கொண்டிருக்க வேண்டும். வடக்கில் இராணுவத்தினால் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படு வதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை ஏற்க முடியாது என்றார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை ௪0




தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை


மத்திய, வரோனிஸ், ஸ்டெப்பி மற்றும் தென்மேற்கு சேனைகளின் துருப்புகள் தினேப்பர் ஆற்றை வெற்றிகரமாகக் கடந்ததன் விளைவாய் தினேப்பரில் எதிரியின் தற்காப்பு- "கிழக்கு அரணின்" மிகவும் பலப்படுத்தப்பட்ட இப்பிரதேசம் பிளக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது தினேப்பரில் தனது தற்காப்பைப் புனரமைப்பதற்காக எதிரி தொடுத்த மூர்க்கத்தனமான பதிலடிகளை (குறிப்பாக கீவ் பிரதேசத்தில்) சோவியத்துருப்புகள் முறியடிக்க வேண்டியிருந்தது. **நவம்பர் 6 ஆம் திகதி கீவ் நகரம் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடிவிக்கப்பட்டது.** கரஸ்தேன், ஷித்தாமிர், ஃபாஸ்தவ் ஆகிய இடங்களை நோக்கி தாக்குதலைத் தொடர்ந்த முதலாவது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 150 கி.மீ. தூரம்வரை முன்னேறி மேற்குக் கரையோர உன்ரேனில் கீவ் போர்த் தந்திர தாக்குமுனையை ஏற்படுத்தின. இந்தத் தாக்குமுனையை ஒழித்துக்கட்டி மீண்டும் கீவ் நகரத்தைப் பிடிப்பதற்காக 1943 ஆம் ஆண்டு நவம்பரில் இரண்டாம் பகுதியிலும் டிசம்பரிலும் பாசிசப் படைத்தலைமை மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. கடுமையான தற்காப்புச் சண்டைகளில் சோவியத்துருப்புகள் எதிரியின் எதிர்த் தாக்குதலை முறியடித்தன.

**உக்ரேனின் தெற்கிலும்- கீரவகிராட், கிரிவோய்ரோக் திசைகளிலும் தினேப்பர் ஆற்றின் கீழ்ப் பகுதிகளிலும்- கடுமையான சண்டைகள் மூண்டன.** 3 மாத சண்டைகளின்போது 2-வது, 3-வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகள் எதிரியின் ஸபரோஸ்யே தலைப்பால தாக்குமுனையை ஒழித்தன. ஸபரோஷ்யே, தினேப்பர் பெத்ரோவ்ஸ்க் ஆகிய நகரங்களை விடுவித்தன. தினேப்பருக்குப் பின் 450 கி.மீ. நீளமும் 100 கி.மீ. வரை ஆழமும் உடைய இரண்டாவது பெரிய போர்த் தந்திர தாக்குமுனையை உருவாக்கின.

4-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் இந்நேரத்தில் மலோச்னாயா ஆற்றில் எதிரியின் தற்காப்பை பிளந்துசென்றன, மெலிதோபலை விடுவித்தன. கிட்டத்தட்ட தினேப்பர் ஆற்றின் கீழ்ப் பகுதி முழுவதிலுமிருந்து எதிரிகளை விரட்டியடித்தன. எதிரியை கிரீமியாவில் சுற்றிவளைத்தன. தினேப்பர் ஆற்றிற்கான சமரின் போது சோவியத் போர்வீரர்கள் தமது உயர்வான தார்மீக- போர்க் குணங்களை- தைரியம், உறுதி, தாக்குவேகம் முதலானவற்றை- இன்னுமொருமுறை வெளிப்படுத்தினர். இந்தச் சமர் வரலாற்றில் சோவியத் போர்வீரர்களின் உயர்ந்த திறமை, இவர்கள் காட்டிய பெரும்வீரம் ஆகியவற்றிற்கு பல உதாரணங்களை விட்டுச்சென்றது.

தினேப்பர் ஆற்றிற்கான சமரில் தரைப் படைகளுக்கு விமானப் படை உதவிபுரிந்தது. செப்ரம்பரில் மட்டும் இது 90 ஆயிரத்துக்கு மேற்பட்ட விமானப் பறத்தல்களை நடத்தி, தனது படைகள் தினேப்பரை கடக்க உதவியது. எதிரியின் மீது 9570 டன் விமானக்குண்டுகளை வீசியது. 55 ஆயிரத்துக்கும் கூடுதலான ஜெட் குண்டுகளைப்போட்டது. நாட்டின் வான் பாதுகாப்பு துருப்புகள் போர்முனைக்கருகே இருந்த தொடர்பு மார்க்கங்களையும் தினேப்பர் ஆற்றின்மீதான கடக்கும் வழிகளையும் மூடிப் பாதுகாத்தன. அஸோவ் ப்ளீட் அஸோவ் கடலின் வட கரையோரமாக தரையிறக்குப் படையினரை இறக்கியது.



தினேப்பர்- கீவ் சமரில் பங்கு கொண்ட பலமில்லியன் கணக்கான வீரத்திருமகன்களுக்கான ஸ்டாலின் கிராட்டினால் வழங்கப்பட்ட பதக்கங்கள்

(தொடரும்)

# இந்தியா- இலங்கை உறவுகளில் விரிசல்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இந்தியாவுடன் இதுவரை காலமும் பேணி வந்த நட்புறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்திற்கு பின்னரான சகல அரசாங்கங்களும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் கைக்கூலிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை தீர்மானத்தின் உள்ளடக்கம் தொடர்பில் அறிந்து கொள்ளாமலேயே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில நட்பு நாடுகளின் ஆதரவு இழக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற திட்டங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தலைமைத்துவ பயிற்சிகளின்போது அதிகமான மாணவர்களுக்கு உபாதை



## திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தலைமைத்துவ பயிற்சிகளின் போது 553 மாணவ, மாணவியர் உபாதைகளுக்கு உள்ளானதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதில் இருவர் எலும்பு முறிவினால் பாதிக்கப்பட்டதாகவும் எனினும் தலைமைத்துவ பயிற்சிகளின் போது எந்தவொரு மாணவனோ மாணவியோ உயிரிழக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்கள் போதைப்பொருட்கள் பயன்படுத்துவதனை தடுக்கும் நோக்கில் தலைமைத்துவ பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பேராதனை, பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்களுக்கு அருகாமையில் கஞ்சா விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும் ஆயினும் அந்த நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

## விசேட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்ப நிறுவனத்தின் 2002- 2006 2 ஆம் தவணைக்குரிய விசேட பரீட்சைக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நடைபெறும்.

எனவே மாணவர்கள் இப்பரீட்சை தொடர்பான விபரங்களை தமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என நிறுவன இயக்குநர் எம். சகாயன் அறிவித்துள்ளார். (அ-8)

## 31 ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் முதலாவது குரு மஹா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் 31 ஆவது ஆண்டு குருபூசைத்தின நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் குருமூர்த்தி ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகள், பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (அ-2)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கலட்டி வீரகத்தி விநாயகர் கோயிலில் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். (அ)

# சர்வதேச சதிகளிலும் பார்க்க உள்நாட்டில் விசமிகள் அதிகம்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் இறுதிக்காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் அதனை முற்றுமுழுதாக குழப்பி சதி செய்வதற்கு எவ்வாறு தமது தந்திரோபாய வழிகளை மேற்கொண்டனரோ அது போன்றே இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட பிரேரணையின் நிகழ்ச்சி நிரல் அமையப் பெற்றிருந்தது என தகவல் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அரச ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

குறிப்பாக இந்நாட்டின் இலவசமாக வழங்கப்படும் கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றை அனுபவித்து விட்டு அற்ப சொற்ப டொலர்களுக்காக தமது தாய் நாட்டை காட்டிக்கொடுக்கும் கும்பல்களானது சர்வதேச எதிர்ப்பு சக்திகளையும் விடவும் பலம்வாய்ந்ததாக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தொலைபேசி மூலம் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்தும் கூறும் போது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாட்டின் மிகவும் முக்கியமான தேவையாக விளங்கிய இலக்கை அடைந்துள்ளது. ஆகவே ஏனைய இலக்குகளையும் நாம் இலேசாக அடைந்து விடுவோம்.

தமது தாய் நாட்டை நேசிக்கும் மக்களின் ஆதரவுடன் சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்படும் எந்தவொரு அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க அரசாங்கமும் ஜனாதிபதியும் தயாராகவுள்ளன. (அ-2)





வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 15 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் சம்பியனாகிய உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ். செல்வதீபன்)

# ஜெனீவா பிரேரணை பிரசாரத்திற்கு தயான் ஜயதிலக்கவுக்கு அழைப்பில்லை

மனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கெதிரான பிரேரணையை வெற்றிகொள்வதற்கு மஹிந்த அரசாங்கம் பலத்த பிரயத்தனம் மேற்கொண்டிருந்தது. எனினும் ஒரு மணி நேர விமானப் பயணத்தில் பிரான்சில் இருந்து வர வழைக்கக்கூடிய இராஜதந்திரி தயான் ஜயதிலக்க ஜெனீவாவிற்கு அழைக்கப்படாமை இராஜதந்திர மட்டத்தில் பரவலாக பேசப்பட்டது.

இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், ஜேர்மனிக்கான இலங்கைத்தூதுவர் சரத் கொன்ஹகே, ஜெனீவாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் சேனுகா செனவிரத்ன ஆகியோர் ஜெனீவா அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான பிரேரணையை தோற்கடிக்க முன்னின்று உழைத்த தற்போதைய பிரான்சிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க அழைக்கப்படவில்லை.

இதேவேளை ஊடகவியலாளர்கள், படைப்பாளிகள் சிலரை சந்தித்த தயான் ஜயதிலக்க, அமைச்சர் மஹிந்த சமரசிங்க, அவருக்கு வழங்கப்பட்டுள்ள பெருந்தோட்ட கைத்தொழில்துறைக்கு மட்டுப்படுத்தப்பட்டால் மாத்திரமே இலங்கையின்வெளிவிவகார கொள்கையின் அடிப்படையில் பாரிய முன்னெடுப்புக்களை மேற்கொள்ளமுடியும்என கூறியுள்ளார்.

அத்துடன் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை தோற்கடிக்க களத்தில் இறக்கப்பட்ட ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர் கியூபாவிற்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படலாம் என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கமுடியாது

## அமைச்சர் டியூ தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது என பதில் வெளிவிவகார அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவை அமர்வுகள் தொடர்பில் நாடாளுமன்றில் இன்று அமைச்சர் டியூ குணசேகர விசேட உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் எவ்வாறான பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்திற்கு இடமில்லை.பயங்கரவாதம் காரணமாக நாட்டின் வளங்களை சரியான முறையில் பயன்படுத்த முடியவில்லை.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததன் மூலம் உலகின் பிரதான அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தியுள்ளோம்.மனித உரிமை பேரவையில் தேவையற்ற தலையீடுகளுக்கு எதிராக இன, மத; மொழி பேதமின்றி நாட்டின் அனைத்து மக்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என அமைச்சர் டியூ குணசேகர குறிப்பிட்டுள்ளார். (அ-2)




# சிறுவர் அரங்கம்

50

## அளவில்லா ஆற்றல் தரும் அதிசயப்பழம்

சில ஆண்டுகளுக்கு முன் இரண்டு விஞ்ஞானிகள் கேரள மாநிலத்து அகஸ்திய மலைப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அபூர்வமான மூலிகைகளை பற்றி ஆராய்ச்சி செய்ய



அவர்கள் நகரப்பகுதியில் இருந்து காட்டிற்குள் வந்திருந்தனர். காணி என்ற பழங்குடியினத்தை சேர்ந்த மல்லன்காணி அவர்களுக்கு வழிகாட்டியாக உதவிசெய்தான்.

கரடுமுரடான காட்டுப் பாதையில் பயணித்த விஞ்ஞானிகள் இருவரும் விரைவிலேயே களைத்துப் போயினர். ஆனால் மல்லனுக்குக் களைப்பே ஏற்படவில்லை. இடையிலேயே மடியிலிருந்து ஏதோ ஒரு பழத்தை எடுத்துக் கடித்துத் தின்று கொண்டே களைப்பு என்பது துளிகூட இல்லாமல் தங்களுடன் நடந்து வந்த அவனுடைய சக்தியைக் கண்டு விஞ்ஞானிகள் வியப்பு அடைந்தனர். அடிக்கடி அவன் உண்ணும் பழங்களில் தான் ஏதோ அபூர்வசக்தி உள்ளதா? என்று இருவரும் எண்ணினர்.


தங்களுடைய சந்தேகத்திற்கு விடை காண எண்ணி அவனிடமிருந்து சில பழங்களை வாங்கி இருவரும் உண்டனர். என்ன ஆச்சரியம்? எங்கு இருந்ததோ அவர்களுடைய உடல்களிலும் சக்தி பிறந்தது.

அதையறிந்த விஞ்ஞானிகள் பரபரப்படைந்தனர். அந்தப் பழத்தை அவர்கள் அதற்கு முன் பார்த்ததும் இல்லை. அதைப் பற்றி கேள்விப்பட்டதும் இல்லை. அத்தகைய அபூர்வ சக்தி வாய்ந்த பழங்கள் நகரங்களில் வாழும் மனிதர்களுக்கும் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்றும் அவற்றிலிருந்து மருந்து தயாரித்தால் அது எத்தனை நோயாளிகளுக்குப் பயன்படும் என்றும் எண்ணினர்.

உடனே இருவரும் மல்லனை அந்தப் பழங்களை உண்டாக்கும் மரத்தினை தங்களுக்குக் காட்ட வேண்டினர். ஆனால் மல்லன் அறிமுகமற்றவர்களுக்கு காட்டக்கூடாது என்று கூறினான். தங்கள் சாதியில் மூத்தவர்களிடம் அதைப் பற்றி சொல்லி அவர்கள்

## அம்புலி மாமா கதைகள்

அனுமதித்தால் மட்டுமே அவற்றைக் காட்ட முடியும் என்றும் கூறினான். பின்பு அவர்களை தங்கள் இனத்து



மூத்தவர்களிடம் அழைத்துச் சென்றான்.

காணியினத் தலைவர்கள் தங்கள் இன மக்கள் அனைவரையும் கூட்டி அதுபற்றி விவாதித்தனர். கூட்டத்தில் பலர் தாங்கள் பாதுகாத்து வரும் ரகசியங்களை அந்நியர்களுக்குத் தெரிவிக்கக்கூடாது என்றனர்.

அவர்களுடன் விஞ்ஞானிகள் நீண்ட நேரம் விவாதம் செய்தனர். சிற்சில மக்களுக்கு மட்டுமே பயன்படும் பொருட்கள் உலகத்தவர் அனைவருக்கும் கிடைத்தால் நன்மையே தவிர ஆபத்தில்லை என்பதை வலியுறுத்தினர். தவிர அப்பழங்களை வெளியுலகிற்குப் பயன்படுத்தினால் அதனால் கிடைக்கும் வருமானம் காணியின மக்களுக்குப் பெரிதும் பயனாகும் என்றும் புரிய வைத்த பிறகே அவர்கள் ரகசியத்தை கூற ஒப்புக் கொண்டனர்.

கடைசியில் அவர்கள் பழத்தின் பெயரைக்கூறவும் பழம் தோன்றும் மரத்தை காட்டவும் ஒப்புக் கொண்டு மல்லனை அவர்களுடன் அனுப்பினர். அவ்வாறே மல்லன் காட்டில் அவர்களை அப்பழங்கள் தோன்றும் தாவரங்கள் இருக்குமிடத்திற்குக் கூட்டிச் சென்றான். அவை செடிகள் வடிவத்திலேயே இருந்தன. அந்தப் பழத்தின் பெயர் ஆரோக்கிய அப்பச்சா என்று மல்லன் தெரிவித்தான்.

அந்தப் பழங்கள் சில வற்றையும் சில செடிகளையும் விஞ்ஞானிகள் தங்களுடன் எடுத்துச் சென்று ஆராய்ச்சி சாலையில் ஆய்வு செய்தனர். ஆரோக்கிய அப்பச்சாவில் நிறைந்திருந்த சில இரசாயனப் பொருட்கள் உடலுக்கு சுறுசுறுப்பையும் அளவில்லா ஆற்றலையும் தருகின்றன என்ற உண்மையை கண்டுபிடித்தனர். அதன் விஞ்ஞானப் பெயர் ட்ரிக்கோபஸ் ஜீலானிகஸ் டிராவாங்கோரியஸ் என்பதாகும்.

அந்தச் செடி உலகிலேயே கேரளத்திலும் தமிழகத்தின் சில பகுதிகளில் மட்டுமே பயிராகிறது என்றும் கண்டு பிடித்தனர்.

பலவிதமான ஆராய்ச்சிகளுக்கு பின்பு இறுதியாக அந்தத் தாவரங்களில் இருந்து விஞ்ஞானிகள் வெற்றிகரமாக ஒரு மருந்தினைத் தயாரித்தனர். அவர்களுடைய கனவு நனவாகியது. காணிப் பழங்குடியின மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது.

மருந்துகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானத்தின் ஒரு பகுதி முறையாக அவர்களுக்குச் சென்றது. பழங்குடி மக்கள் தங்களுக்குள்ளாக ஒரு குழு அமைத்துக் கொண்டு அந்த வருமானத்தை தங்களுடைய பொதுநலத் திட்டங்களில் செலவிட்டனர்,

தற்போது அந்த தாவரங்கள் வளரும் காட்டுப் பகுதி காட்டிலாகாவின் பொறுப்பில் உள்ளது. பழங்குடி மக்கள் தங்களுடைய நிலத்தில் ஆரோ க்கிய அப்பாச் செடிகளைப் பயிரிட காட்டிலாகா அனுமதித்து உள்ளது. காட்டிலேயே வசித்துவரும் காணியின் மக்களுக்கு தாங்கள் பரம்பரையாகத் தெரிந்து வைத்துள்ள தாவரங்களைப் பற்றிய தகவல்கள் எவ்வளவு தூரம் பயன்படுகின்றன என்பது புரியவந்துள்ளது. தங்கள் வாழ்க்கையையே மேம்படுத்த அவை உதவுகின்றன என்ற உண்மை தற்போது அவர்களுக்குத் தெரியவந்துள்ளது.

# திரை விமர்சனம்

# கொள்ளைக்காரன்



திருட்டையே தொழிலாக கொண்ட ஒரு இளைஞனின் வாழ்க்கையும் அவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சொல்லும் கதை கொள்ளைக்காரன். தெப்பக்குளத்துல தீமிங் கலத்தை இறக்கிவிட்ட மாதிரி படம் முழுக்க குலுங்கிக் கொண்டேயிருக்கிறது தியேட்டர். பேரரசு கதைக்கு பாக்கிய ராஜ் வசனம் எழுதினால் எப்படியிருக்குமோ அப்படி நகைச்சுவை வேளைகளில் நம்மை வசீகரித்து விடுகிறார் அறிமுக இயக்குநர் தமிழ்ச்செல்வன். ஆடுதோடு என்று கிடைத்ததையெல்லாம் திருடும் கொள்ளைக்காரன் தான் விதார்த்தை காதலிக்கிறார் சஞ்சிதா. யாருக்கும் அடங்காமல் திரியும் விதார்த் அந்த ஊர் தர்மகர்த்தாவுக்கும் அதே முகத்தை காட்ட நேரம் பார்த்து கழுத்தறுக்கிறார் வில்லன். திருட்டு தொழிலுக்கு பூட்டு போட்ட பின்பு சோதனை வரு கிறது விதார்த்துக்கு. கோவில் நகையை தானே திருடிவிட்டு பழியை இவர் மீது போடுகிறார் வில்லன்.

அதில் நடக்கும் சண்டையில் மனவளர்ச்சி குன்றிய தங்கையை பறி கொடுக்கிறார் விதார்த். அப்புறமென்ன? ரத்தக்களறியாகிறது ஏரியா, வில்லனை கொன்று விட்டு சிறைக்கு போகும் விதார்த், அப்புறம் வந்து காதலியை கரம் பிடிப்பதே முடிவு.

மைனா ஹிட் என்பதாலேயே விதார்த்துக்கு குருவி என்று பெயர் வைத்திருப்பார்கள் போலிருக்கிறது. திருட்டு ஆட்டை விற்ற பணத்தில் கூலிங்கிளாஸ், குளுகுளு சட்டை சகிதம் வரும் விதார்த் தனது அழகை வர்ணிக்க ஆள்பிடிப்பது நல்ல நகைச்சுவை. ஜாமெண்ட்ரி பாக்சில் பணம் இருப்பது தெரியாமல் சஞ்சிதாவிடம் அதை நேர்மையாக திருப்பிக் கொடுப்பதும் அவருக்காகவே டுட்டோரியல் காலேஜில் சேர்ந்து படிக்க முனைவதுமாக ரகளையடிக்கிறார்.

சஞ்சிதாவை அடிக்கும் வாத்தியாருக்கு அடுத்த கணமே விழுகிற பிரம்படிக்கு தியேட்டரே கொல்லென்கிறது. இமேஜ் பார்க்காமல் அக்காவிடம் விளக்குமாறு அடி வாங்குகிற காட்சி ஒன்றுக்காகவே ஸ்பெஷலாக பாராட்டலாம் விதார்த்தை.

தெருமுனையில் பஸ் ஸ்டாண்டில் இப்படி எங்கு பார்த்தாலும் தென்படுகிற முகம்தான் சஞ்சிதாவுக்கு. அதுவே அவர் மீது தனி அட்டென்ஷனை ஏற்படுத்துகிறது. இதே அடக்க ஒடுக்கத்தை பின்பற்றினால் இன்னொரு தேவயானியாகலாம்.

ஆட்டை திருட்டுக் கொடுக்கிற ஆயா முதல் அநியாயமாக செத்துப் போகிற சிறுமி வரைக்கும் புள் மார்க் கொடுக்கலாம் எல்லா கரக்டர்களுக்கும். அக்காவாக வரும் செந்தில் குமாரியின் நடிப்பினைச் சொல்லவே தேவையில்லை. அவர் இருந்தாலே படங்கள் முழுமை பெறுகின்றன என்று சொன்னால் அது மிகையல்ல.


இந்தப் படத்தில் அவரது வழக்கமான மதுரைப் பேச்சு வழக்கும் இருக்கிறது. அதனையும் மீறி பொறுப்பற்ற தம்பி, மன நலம் குன்றிய தங்கை, வாழ்க்கைப்பட்டுப் போன இடத்தில் தம்பியால் ஏற்படும் பிரச்சினை தொடர்ந்து தங்கையின் இழப்பு இப்படி ஒவ்வொரு இடத்திலும் தன் நடிப்புத் திறமையை வேறு ஒரு கோணத்தில் பதிவு செய்திருக்கிறார். குணச்சித்திர நடிகைக்கான தேசிய விருது செந்தில் குமாரிக்கு வெகு தூரத்தில் இல்லை எனலாம்.

மனநலம் குன்றியவராக நடித்த பேபி வர்ஷாவும் அருமை. எதைச் சாப்பிட்டாலும் அது இட்லியாக இருந்தாலும் மிட்டாய்களாக இருந்தாலும் அண்ணனுக்கு என்று கொஞ்சம் எடுத்து தன் சட்டைப் பையினுள் வைக்கும் அழகே அழகு.

ஆரம்பத்தில் அப்படி இப்படி என்று படம் அலைபாய்ந்தாலும் போக போக சரியான ரூட்டில் திரைக்கதை நகர்ந்து ரசிக்கும்படி இருக்கின்றது. ஏற்கனவே தமிழ் ரசிகர்கள் பார்த்த செண்டிமெண்ட் ஃபார்முலாதான் என்றாலும் அதை திரும் பவும் பார்க்கும் அளவுக்கு திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் விதார்த் கூலிங்கிளாஸ் ஒன்றை மாட்டிக் கொண்டு நான் இப்போ எப்படி இருக்கேன் சொல்லு என்று ஒவ்வொரு முறையும் கிரேன் மனோகரை துரத்த அதற்கும் அவர் ஓடும் காட்சிகளில் தியேட்டரே சிரிப்பு சத்தத்தில் அல்லோலப்படுகிறது.

இப்படி வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் இயக்குநர் செண்டி மெண்ட் காட்சிகளின் மூலம் அவ்வப்போது கண்களை ஈரமாக்கி தாய்மார்களின் வரவேற் பையும் பெற்று விடுகிறார்.

ஜோகனின் இசை பரவாயில்லை. இரண்டு பாடல்கள் கேட்கும் படி உள்ளன. குறிப்பாக சாமிக் குத் தம் என்ற சோகப் பாடல். டைரக்டர் தமிழ்ச் செல்வனின் பேனாவில் துள்ளி விளையாடும் நகைச்சுவை சப்பாத் திக் கள்ளியில் சாறெடுத்து அதை பேனா மையாக்கி எழுதுவது போன்ற கிராமத்து இயல்புகள் பழக்க வழக்கங்கள் மனசை கொள்ளையடிக்கிறது.



# படப்பிடிப்பில் விபத்து



கொலிவுட்டில் தயாராகும் வெற்றிச் செல்வன் படப்பிடிப்பின் போது விபத்து ஏற்பட்டு நாயகன் அஜ்மல் நாயகி ராதிகா ஆப்தே படுகாயமடைந்துள்ளனர்.

வெற்றிச்செல்வன் படத்தில் அஜ்மல் கதாநாயகனாகவும் ராதிகா ஆப்தே கதாநாயகியாகவும் நடித்து ருத்ரன் இயக்கி வருகிறார்.

கடந்த சில நாட்களாக ஊட்டியில் நடைபெற்று வரும் இப்படத்தின் படப்பிடிப்பு நேற்று மாலை ஊட்டி சேரிங் கிராஸ் பகுதியில் கதாநாயகன் அஜ்மல் கதாநாயகி ராதிகா ஆப்தே ஆகியோர் ஒரு ஆட்டோவில் வருவது போன்ற காட்சி படமாக்கப்பட்டது.

இயக்குநர் ருத்ரன் அக்காட்சியை படமாக எடுத்துக் கொண்டிருந்த போது திடீரென ஆட்டோ ரோட்டின் தடுப்பு சுவரில் மோதி கவிழ்ந்தது. மேலும் தடுப்பு சுவர் தடுக்காவிட்டால் ஆட்டோ பள்ளத்தில் உருண்டு மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு இருக்கும்.

இந்த ஆட்டோ விபத்தில் படுகாயமடைந்த கதாநாயகன் அஜ்மல் கதாநாயகி ராதிகா ஆப்தே, இயக்குநர் ருத்ரன் ஆகியோரை படப்பிடிப்பு குழுவினர் மீட்டனர். இந்த சம்பவம் குறித்து இயக்குநர் ருத்ரன் கூறுகையில், ஊட்டியில் சில நாட்களாக படப்பிடிப்பு நடத்தி வருகிறோம்.

நேற்று கதாநாயகனும் கதாநாயகியும் ஆட்டோவில் செல்வது போன்ற காட்சியை படமாக்கி கொண்டிருந்தோம். அப்போது திடீரென ஆட்டோ தடுப்பு சுவரில் மோதி கவிழ்ந்தது.

தடுப்பு சுவர் இல்லாவிட்டால் மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு இருக்கும். இந்தச் சம்பவத்தில் இருந்து மீள வெகு நேரமாகிவிட்டது. விபத்து ஏற்பட்ட நேரத்தில் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஊட்டியில் பல்வேறு இடங்களில் படப்பிடிப்பு நடத்தி உள்ளோம். பொதுமக்கள் நல்ல ஒத்துழைப்பு அளித்தனர். இதனை மறக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# சினிமா உலகம்...

சங்குநாதம்



## 'த்திரி' (3) படம் இம்மாதம் வெளியீடு



ஐஸ்வர்யா இயக்கத்தில் தனுஷ், ஸ்ருதி ஹாசன் நடித்து இருக்கும் த்திரி படம் எதிர் வரும் 30ஆம் திகதி முதல் திரைக்கு வர இருக்கிறது.

தனுஷின் முந்தைய படங்களை காட்டிலும் இந்த படம் அனைத்து இடங்களிலும் அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆந்திராவில் ஒரு இடத்தில் மட்டும் இப்படம் ரூ .3 கோடிக்கு விலை போய் உள்ளது. இந்த அளவுக்கு தனுஷின் படம் விலை போய் இருப்பதற்கு முக்கிய காரணம் 3 படத்தில் உள்ள கொலவெறி பாடல் தான் என கூறப்படுகிறது.


புதுமுகம் அனிரூத் இசையமைப்பில் வெளிவந்திருக்கும் வை திஸ் கொலவெறி என்ற பாடலை தனுஷே எழுதி பாடியிருக்கிறார். இந்த பாடல் உலகம் முழுக்க சூப்பர் ஹிட்டாகியுள்ளது.

இதனால் இந்த ஒருபாட்டுக்காகவே த்திரி படத்திலும் பெரும் எதிர்பார்ப்பு கிளம்பி இருக்கிறது. இதனால் படம் எப்போது வெளிவரும் என்று அனைத்து தரப்பிலும் ஒரு ஆவல் இருந்து வந்தது.

இந்நிலையில் த்திரி படத்தை மார்ச் 30 ஆம் திகதி முதல் வெளியிட இருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் தேரடியில் இருந்து முத்தியடைந்த செல்லப்பா சுவாமி

## 97 ஆவது குருபூசைத்தினம் இன்று



**நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி** என்றும் பாட்டிற்கமைய நல்லூர்த் தேரடியில் இருந்து முத்தியடைந்த செல்லப்பா சுவாமிகளின் 97 ஆவது குரு பூசைத் தினம் இன்றாகும்.

இந்நாளில் அவருடைய வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களைப் பற்றி சிந்திப்போம்.

தேன் குடிப்பதற்காக பூக்களை சுற்றித் திரியும் வண்டுகள் போல செல்லப்பா சுவாமிகளை பின் தொடர்ந்து திரிந்தார் யோக சுவாமிகள். செல்லப்பர் தனது இருப்பிடம் சென்ற போது யோகரைப் பார்த்து **அங் கேயே நில்** என்று சொல்லிவிட்டு சென்று விட்டார்.

ஆனால், யோகர் மறுதினமும் அதே இடத்தில் நின்றார். இதனைக் கண்ட செல்லப்பர் யோகரை அணுகி **நீ ஆரெடா, உன்னுள்ளே பாரடா** என்று கூறி தீட்சையும் செய்தருளினார். **எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், ஒரு பொல்லாப்புமில்லை, முழுவதும் உண்மை** என்ற மகா வாக்கியங்களையும் யோகருக்கு உபதேசித்தார்.

இதன்பின் செல்லப்பர், யோகர் உட்பட ஒரு குழுவாக கதிர்காமம் சென்றனர். சில தினங்களின் பின் யோகர் தவிர்ந்த ஏனையோர் திரும்பினர். யோகரைக் காணாத அவரின் உறவினர் செல்லப்பரிடம் அவரைப் பற்றி விசாரித்தனர். அதற்கு சுவாமிகள் யோகன் செத்தான் என்று கூறினார். உறவினர் கவலையடைந்து இறந்தவருக்கு செய்யும் கடன்களை செய்தனர். இதன்பின் யோகர் கதிர்காம யாத்திரை முடித்து வந்து கொழும்புத்துறையில் இலுப்பை மரத்தின் கீழ் தியானத்தில் இருந்தார்.

1962 ஆம் ஆண்டு எனக்கு ஒன்பது வயது. எமது குடும்பத்தினர் எல்லோரும் கொழும்புத்துறைக்கு யோகசுவாமிகளிடம் சென்றோம். எனது அப்பம்மா பழங்கள் உள்ள அர்ச்சனைத் தட்டை சுவாமிகளின் முன்வைத்தார்.

சுவாமிகள் நிமிர்ந்து பார்த்தார். உடனே எடு, எடு இதை எல்லாம் கொண்டு போய் அங்கே (செல்லப்பருக்கு) வைத்து கும்பிடுங்கள். எனது குரு இருக்கும்போது நான் எதற்கு என்று கூறி அனுப்பி வைத்தார். அதன் பின் நாம் அங்கு போவதில்லை.

செல்லப்பா சுவாமிகள் இறுதிக் காலத்தில் தனது கால் நோவுக்கு தேங்காய் மட்டையை சூடாக்கி ஒத்தடம் பிடிப்பது வழக்கம். இதனை அவருடைய மருமகனான சபாரெத்தினம் தான் செய்வார். ஒருநாள் சுவாமிகள் தன்னுடன் இருக்கும் அடியார்களை நாளை வாருங்கள். உங்களுக்கு ஒரு அதிசயம் காட்டுகிறேன் என்றார்.

அதன்படி நடு இரவு அருகில் இருக்கும் மருமகனான சபாரெத்தினத்தை கூப்பிட்டிருக்கிறார். அவர் ஒத்தடம் பிடிக்கத்தான் கூப்பிடுகிறார் என்ற பயத்தில் அவர் போக வில்லை.

விடியற்காலை பார்த்தபோது சுவாமிகள் வடக்குப் பக்கம் பார்த்தபடி ஒரு காலை நீட்டி ஒரு காலை மடக்கி வலது கைப்பெருவிரலை வாயில் வைத்தபடி சமாதியடைந்திருந்தார்.

சுவாமிகள் கூப்பிட்ட போது சபாரெத்தினம் சென்றிருந்தால் சுவாமிகள் அவருக்கு அருள் வாக்கு சொல்லியிருப்பார். அவருடைய காலம் அவரை அங்கு போக விடவில்லை.

சுவாமிகளின் விருப்பப்படி அவருடைய மருமகன் தான் சுவாமிகளின் கிரியைகளை செய்து முடித்தார். நாமும் அவருடைய மகா வாக்கியங்களின் பொருளை உணர்ந்து வாழ்வோமாக.

க.லோகானந்தம்
(செல்லப்பா சுவாமிகளின் பூட்டன்)

# பாடசாலை மாணவர்களின் பகல் போசனத்துடன் முட்டை வழங்க ஏற்பாடு

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு திட்டத்தை மேம்படுத்தும் வகையில் வாரத்தில் மூன்று நாட்களுக்கு பகல் போசனத்துடன் முட்டை ஒன்றையும் வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு கட்டுப்பாட்டு குழுவின் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே ஜனாதிபதி குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு இப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

தற்போது சந்தையில் முட்டை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதனை நிவர்த்திக்கும் பொருட்டும் பிள்ளைகளின் சந்துணவுப் பிரச்சினைகளை போக்கும் விதத்திலும் இத்திட்டத்தை அமுல்படுத்துமாறும் யுனெஸ்கோவின் உதவியை பெறுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின்போது கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் காய்கறி வகைகளுக்காக செலவு செய்யும் தொகை சரிபாதியாக குறைந்துள்ளது என்று தெரிவித்துள்ளனர். இதற்கு அரசின் திவி நெகும திட்டமே காரணம் என ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

(அ-2)

# கருணாநிதி உள்ளிட்ட தமிழக தலைவர்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளனர்

## பிரதியமைச்சர் முரளிதரன் கூறுகிறார்



(கொழும்பு)

தமிழக மாநிலத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளார் என மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் எனப்படும் கருணா தெரிவித்துள்ளார்.

கருணாநிதி உள்ளிட்ட பல தமிழக அரசியல்வாதிகள் அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலைமையை அடைந்தவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருணாநிதி போன்றோருக்கு மெய்யான தமிழ் மக்களின் ஆதரவு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஈழக் கோரிக்கையை பிரசாரம் செய்து சில தமிழ் மக்களை தூண்டி அதன் மூலம் அரசியல் இருப்பை உறுதி செய்து கொள்ள இவர்கள் முயற்சிக்கின்றார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருணாநிதி போன்ற தமிழகத் தலைவர்கள் இதய சுத்தியுடன் தமிழர் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்பதனை பல தமிழர்கள் அறிவார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தமிழ் தலைவர்களின் பிழையான வழிகாட்டல்களினால் பெருமளவிலான உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகார மோகம் காரணமாக கருணாநிதி போன்ற அரசியல்வாதிகள் மக்களை திசை திருப்புகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நல்லிணக்கம் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். நீண்ட காலமாக நீடித்து வந்த பிரச்சினைகளுக்கு துரித கதியில் தீர்வு வழங்குவது பொருத்தமாக அமையாது என அவர் தெரிவித்துள்ளார். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் காத்திரமான முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.


(அ-2)


# லொறி குடை சாய்ந்ததில் 15 பேர் காயம்

(கொழும்பு)

கல்கமுவ, புதுருவகந்த பகுதியில் லொறியொன்று குடை சாய்ந்ததில் 15 பேர் காயமடைந்துள்ளனர். நல்லச்சி பகுதியில் நேற்று முன்தினம் மரண வீடொன்றிற்கு சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சிலரே இந்த அனர்த்தத்திற்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஏழு பேர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக கல்கமுவ வைத்தியசாலை அதிகாரி தெரிவித்துள்ளார். (அ-2)





யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் கு.ஜெகநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் உப அதிபர் ச.நித்தியானந்தம் நிற்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாம வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா வெற்றியீட்டிய மாணவிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# அதிசய உலகம்...


## மனிதர்களுக்கு எதிராக காற்பந்து விளையாடும் அபூர்வ குதிரைகள்



பண்டைய காலம் தொட்டு அரசர்களாலும் ஏனைய பொதுமக்களாலும் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்த குதிரைகள் தற்போது மனிதர்களுக்கு எதிராக காற்பந்து போட்டியில் களமிறங்கியுள்ளன.

இக்காற்பந்துப்போட்டியில் பங்குபற்றும் இரண்டு குதிரைகளும் மிகத்திறமையாகவும் புத்திசாலித்தனமாகவும் விளையாடுகின்றன: எனினும் அவற்றிற்கு இம்மை மறுமை தெரியாது என்பதால் போட்டிக்காக களமிறங்குபவர்கள் தான் அவதானமாக இருக்கவேண்டும் . கரணம் தப்பின் அம்புலன்ஸ்ஸிற்கு அழைப்பு எடுக்கும் கதியும் நேரலாம்.

## சூரிய சக்தியில் இயங்கும் ஆட்டோ



சூழல் மாசடைதல் என்பது உலகம் எதிர் நோக்கியிருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை அதிகரித்து வரும் சனத்தொகை. இதனால் அதிகரித்துச் செல்கின்ற வாகனங்கள் எனபல பிரச்சினைகளுக்கு உலகம் முகம் கொடுத்து வருகிறது. எதிர்பார்க்காதளவு உற்பத்தியாகியிருக்கும் வாகனங்களினால் வெளிவிடப்படுகின்ற புகை -சூழலை மாசுபடுத்தி வருகிறது. இதனை எவ்வாறு தடுப்பதென்பது பற்றி விஞ்ஞானிகள் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்நிலையில் தான் இந்தியாவில் புதுடில்லியில் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத சூரிய சக்தியில் இயங்கக் கூடிய ஆட்டோ ரிக்சாவை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இலங்கை, இந்தியாவைப் பொறுத்தமட்டில் ஆட்டோ வண்டிகளினால் வெளியிடப்படுகின்ற புகைகள் சூழலை அதிகளவாக மாசுபடுத்தி வருகின்றன. இப்படியான நிலையில் சூழலை மாசுபடுத்தாத ஆட்டோ வண்டியின் கண்டுபிடிப்பு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

இந்தியாவின் தொழிற்துறை மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி மத்திய நிலையத்துடன் இணைந்து மத்திய இயந்திர பொறியியல் ஆராய்ச்சி நிறுவகம் இந்த அரியவகை ஆட்டோவினை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்த வடிவத்திற்கு சொலெ க்ஷோவ்ஸ் என யெரிட்டிருக்கிறார்கள்.முச்சக்கர வண்டிகளை ஆங்கிலத்தில் றைஷோ என அழைப்பார்கள்.

அதனைப் போல சூரிய சக்தியில் இயங்குகின்ற முச்சக்கர வண்டி என்பதால் சொலெ க்ஷோவ்ஸ் என பெயரிட்டுள்ளார்கள். இக்கண்டுபிடிப்புக்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.


## 130 வருடங்களுக்கு முந்தைய மம்மி சீனாவில் கண்டுபிடிப்பு



130 வருடங்கள் பழைமைவாய்ந்த மம்மி ஒன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி ஒன்றில் ஈடுபட்டிருந்த சிலர் நிலத்தை தோண்டும் போது இந்த மம்மி கிடைத்துள்ளது. '

பெண் ஒருவரின் தோற்றத்தில் காணப்படும் இந்த மம்மியின் உடலில் தோல் காணப்படுவதுடன் பற்களும் பெருமளவில் சிதைவடையாமல் காணப்படுகின்றது. பியூயியான் மாநிலத்திலுள்ள நின்டே எனும் இடத்தில் காணப்பட்ட இந்த மம் மிக்கு அருகில் கல்வெட்டு ஒன்றும் காணப்பட்டுள்ளது. அதில் கடந்த 1882 ஆம் ஆண்டு இந்த மம்மி புதைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## ஆமையின்மேல் விநோதமாக பயணம் செய்யும் நாய்க்குட்டி



மனிதர்கள் செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் நாய்க்குட்டி தனது எஜமானியுடன் பயணம் செய்வதைத் தான் பார்த்திருப்போம். ஆனால் இங்கு காணப்படும் நாய்க்குட்டி ஒன்று எந்த விதமான பயமின்றி ஆமையின் மேல் அமர்ந்து தனது பயணத்தினை மேற்கொள்கின்றது.

அவ்வாறு ஆமையின் மீது தனது பயணத்தினை மேற் கொள்ளும் நாய்க்குட்டியினையும் நாய்க்குட்டியை சுமந்து செல்லும் ஆமையின் காட்சி படத்தில்...

## பறவையை போன்று பறக்கும் மனிதன்



நீண்ட நாட்களாக பறவைகளைப் போன்று பறக்க ஆசைப்படும் மனிதனின் ஆசையை நிறைவேற்றுவதைப் போல் நவீன இறக்கை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட இறக்கையை பயன்படுத்தி ஜார்னோ ஸ்மீட்டிஷ் என்ற நபர் ஏறத்தாழ 100 மீற்றர்கள் தூரம் சுயமாக பறந்துள்ளார்: இதன் காணொளி யூரியூப்களிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## ட்றம்ஸ் இசையினால் அசத்தும் சிறுவன்




பொதுவாக இன்றைய சாதனைகள் அனைத்தும் சிறுவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று கருதும் அளவிற்கு பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் சிறுவர்கள் உலகளாவிய ரீதியில் பல சாதனைகளுக்கு சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். இங்கு ஒரு சிறுவன் தன் அபார திறமையினால் பல பேரை வியப்பில் ஆழ்த்துகின்றான்.

இச் சிறுவன் உலகின் முன்னணி Drums கலைஞரான சிவமணியுடன் போட்டி போட்டுக் கொண்டு தனது திறமையினை வெளிப்படுத்தும் சிறுவனை படத்தில் பாருங்கள்.

# நீதியை நிலைநாட்ட சிறந்த நடவடிக்கை

## பிரேரணை குறித்து ராதிகா சிற்சபைஈசன்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமர்வில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இலங்கைத் தீவில் நீதியை நிலைநாட்டுவதற்கான முதற்படி என்று கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா சிற்சபைஈசன் தெரிவித்துள்ளார்.

கனடாவின் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி கருத்தை மேற்படி கட்சியின் மனிதவுரிமைகளுக்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பானஉறுப்பினருடன் இணைந்து தெரிவித்துள்ளார்.

புதியஜனநாயகக்கட்சியின்வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் ஹெலன் லவடிர் கருத்துத் தெரிவிக்கையில், தங்களது கட்சி நீண்ட காலமாக இந்த விவகாரத்தை சர்வதேச நாடுகள் கவனத்திலெடுத்து உரிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமெனக் கேட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

மேற்படி கட்சியின் மனித உரிமை விவகாரங்களுக்கான பாராளுமன்ற உறுப்பினர் வெய்ன் மார்சன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த ஆரம்ப முயற்சி இலங்கையில் நீண்டு நிலைக்கும் ஒரு நிரந்தர சமாதான சூழலிற்கு வழிவகுக்கும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த ராதிகா சிற்சபைஈசன் உலகின் பார்வை தற்போது இலங்கையில் நிலை கொண்டுள்ள இத்தருணத்தைப் பயன்படுத்தி நாங்கள் அனைவருமே மரியாதையுடன் வாழக்கூடிய ஒரு தீர்வுக்கு வழி செய்ய வேண்டுமென்றும் இந்தப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். (அ-2)

## ஜெனீவாவில் நாட்டுக்கு எதிராக செயற்பட்ட வெளிவிவகார அமைச்சு பெண் பற்றி விசாரணை

ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நாட்டுக்கு எதிராக செயற்பட்ட வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேச விரோதமான முறையில் வெளிநாட்டுச் சக்திகளுக்கு குறித்த பெண் அதிகாரி ஆதரவு வழங்கியுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மனித உரிமை பேரவை அமர்வுகளில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இந்த அதிகாரி அங்கம் வகித்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அமர்வுகள் நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக பிரபல அரசசார்பற்ற நிறுவனமொன்றின் முக்கியஸ்தர் ஒருவருடன் நான்கு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியதாக குற் றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவன முக்கியஸ்தரும் ஜெனீவா சென்று நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்துள்ளார். இந்தப் பெண் அதிகாரி அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. உளவுப் பிரிவுடன் தொடர்புகளைப் பேணுகின்றாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகளுடன் ஜெனீவா விஜயம் செய்த இந்தப் பெண் அதிகாரி மிகவும் நுட்பமான முறையில் எதிர்த்தரப்பினருக்கு தகவல்களை வழங்கியுள்ளார். இந்தப் பெண் அதிகாரி சில ஐரோப்பிய நாடுகளில் தூதுவராக கடமையாற்றியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)

## இலத்திரனியல் தே. அடையாள அட்டை கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோக கருத்திட்டத்தை இம்மாத இறுதி முதல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள ஆட்பதிவு திணைக்களம் இக் கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் தற்போது இலத்திரனியல் அடையாள அட்டை கருத்திட்ட வேலைக்கான கருத்திட்ட பணிப்பாளரொருவரை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பத்தை இலங்கை பிரஜைகளிடமிருந்து கோரியுள்ளது.

பொது முகாமைத்துவ சுற்றுநிருப இலக்கம் 33 இற்கு அமைவாக சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளுமென சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளத்தை பெறக்கூடிய இந்த வெற்றிடத்துக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் குறைந்தபட்சம் முகாமைத்துவத்தில் 15 வருட அனுபவமும் அரச அல்லது வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படும் அபிவிருத்தி கருத்திட்டமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 8 வருடம் அனுபவம் ஆகிய தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றதென பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார். (அ-2)

## கமநல அபிவிருத்திக்குழு நிர்வாகத் தெரிவு

துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகள் கமக்கார அமைப்புக்களில் இருந்து இவ்வாண்டுக்குரிய கமநல அபிவிருத்திக்குழு தெரிவாகியுள்ளது. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைவராக கணபதிப்பிள்ளை யோகநாதன், உப தலைவ ராக ஓய்வுபெற்ற அதிபர் கந்தையா குமாரசாமி உட்பட 15 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். இதில் செயலாளராக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரே அரச சுற்றுநிருபத்திற்கேற்ப தெரிவாகினார். (அ-3-15)

# 2012.03 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1584-வேர்ஜீனியா மாநிலத்தை பயன்படுத்த அல்லது சுரண்ட சேர் வால்ட்டர் ரேலி காப்புரிமம் பெற்றார்.

★ 1634-மேரிலாந்துக்கு முதலாவது குடியேறிகள் வந்தனர்.

★ 1655-டைட்டான் என்ற சனிக் கோளின் மிகப் பெரிய சந்திரனை கிறிஸ்டியான் ஹைஜன்ஸ் கண்டுபிடித்தார்.

★ 1807-அடிமைகளை வர்த்தகம் செய்வது ஐக்கிய இராச்சியத்தில் சட்டம் மூலம் தடை செய்யப்பட்டது.

★ 1821-(ஜூலியன் நாள்காட்டி) ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக கிரேக்கர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். கிரேக்க விடுதலைப் போர் ஆரம்பமானது.

★ 1857-பிரெஞ்சுக்காரான லியோன் ஸ்கொட் ஒலியை பதிவு செய்யும் கருவிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1911-நியூயோர்க் நகரில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீயில் சிக்கி 146 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

★ 1918-பெலாரஸ் மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: அச்சு அணி நாடுகள் அமைப்பில் யூகொஸ்லாவியா இணைந்தது.

★ 1947-இலினோயில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு விபத்தில் 111 பேர் உயிரிழந்தனர்.

★ 1949-எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகியவற்றைச் சேர்ந்த 92 ஆயிரம் பேர் சோவியத் அதிகாரிகளினால் சோவியத் ஒன்றியத்தின் பல ஒதுக்கமான இடங்களுக்கு கட்டாய வேலைக்காக அனுப்பப்பட்டனர்.

★ 1953-ஆந்திர மாநில அமைப்பு பற்றிய அதிகார பூர்வமான பிரகடனத்தை ஜவகர்லால் நேரு நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என அறிவித்தார்.

★ 1954-முதலாவது வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை RCA நிறுவனம் வெளியிட்டது. (12" திரையளவு விலை $1000)

★ 1957-மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் ,நெதர்லாந்து மற்றும் லக்சம்பேர்க் ஆகியன இணைந்து ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டது.

★ 1965-மனித உரிமைவாதி மார்ட்டின் லூதர் கிங் தனது 4ஆவது நாள் 50 மைல் எதிர்ப்புப் பயணத்தை முடித்துக் கொண்டார்.

★ 1971-வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் கிழக்கு பாகிஸ்தானுக்கு எதிரான தேடுதலொளி நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

★ 1975-சவுதி மன்னர் ஃபைசால் தனது மருமகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1990-நியூயோர்க் நகரில் சட்டமுரணான சமூக விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் சிக்கி 87 பேர் உயிரிழந்தனர்.

★ 1992-சோவியத் விண்வெளிவீரர் செர்கே கிரிக்காலொவ் மீர் விண்வெளி நிலையத்தில் 10 மாதங்கள் தரித்திருந்துவிட்டு பூமி திரும்பினார்.

### பிறப்பு

★ 1914-நோர்மன் போர்லாக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ.2009)

### இறப்பு

★ 1914-பிரெடெரிக் மிஸ்ட்ரால், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சுக் கவிஞர் (பி.1830)

### சிறப்பு நாள்

★ கிரேக்கம்- சுதந்திர தினம்

# ஜெனீவாவில் இலங்கைக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த இந்தியா...!



ஜெனீவாவில் அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கப் போவதாக தெரிவித்த பின் ஜெனீவாக்களம் இன்னோர் பரிமாணத்திற்கு சென்றதுடன் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் 24 ஆதரவு வாக்குகளால் நிறைவேறியுள்ளது. தீர்மானத்திற்கு எதிராக 15 நாடுகளும் 8 நாடுகள் நடுநிலையும் வகித்துள்ளன.

தமிழ்த் தேசிய அரசியலின் வரலாற்றில் புறம் சார்ந்த ஒரு பண்பு மாற்றம்தான் இது. புவிசார் அரசியலில் இவ்வாறான ஒரு தவிர்க்க முடியாத நிலைவரும் என நான் ஏற்கனவே பல தடவைகள் கூறியிருந்தேன்.

இந்தியா ஒரு கட்டத்தில் பகிரங்கமாகவே அமெரிக்கா- இந்திய கூட்டத்தில் தொழிற்பட்டு இலங்கைக்கு எதிரானநிலை எடுக்கவேண்டி வரும் என்பது எதிர்பார்த்த ஒன்றே. ஆனால், இவ்வளவு விரைவாக நடைபெறும் என்பது பெரியளவிற்கு எதிர்பார்க்கப்படவில்லை. இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி மாறிய பின்னரே இவ்வாறான சூழல் ஏற்படும் எனக் கருதப்பட்டது. இலங்கைக்கு எதிரான பொதுக்கருத்து தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் எழுச்சியடைந்தபோது அதனை இலகுவில் தட்டிக்கழிக்க காங்கிரஸ் ஆட்சியினால் முடியவில்லை. எனினும் இது மட்டும் காரணமல்ல.

இந்தியாவின் இந்த முடிவுக்கு பல காரணங்கள் தொழிற்பட்டு இருக்கின்றன. அதில் முதலாவது காங்கிரஸ் அரசாங்கத்தின் இருப்பாகும். மத்தியில் காங்கிரஸ் கட்சி தனித்து ஆட்சியில் இருக்கவில்லை. பல மாநிலக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தே ஆட்சியில் இருக்கின்றது. அதில் முதலாவது நிலையில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமூல் காங்கிரஸும், இரண்டாவது நிலையில் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகமும் இருக்கின்றன. திரிணாமூல் காங்கிரஸுக்கு 19 ஆசனங்களும் தி.மு.க.விற்கு 18 ஆசனங்களும் மத்தியில் உண்டு.

மம்தா பானர்ஜியுடன் காங்கிரஸ் கட்சிக்கு நிறையவே முரண்பாடுண்டு. ரயில்வேத் துறை வரவுசெலவுத்திட்டம் இம் முரண்பாட்டை மேலும் வளர்த்துள்ளது. திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ரயில்வே அமைச்சர் திருவேதியை பதவியை இராஜினாமா செய்யுமாறு மம்தா பானர்ஜி கேட்டிருக்கிறார். முரண்பாடு வளர்ந்தால் கூட்டரசாங்கத்திடமிருந்து மம்தா பானர்ஜி வெளியேறவும் கூடும்.மேற்கு வங்காளத்தின் ஆட்சி தன்கையில் கிடைத்த பின்னர் மத்திய அரசு பதவிகள் பற்றி மம்தா பானர்ஜி பெரியளவிற்கு அக்கறை செலுத்துவதில்லை. இந்தியாவின் சண்டைக் கோழிகள் மூவர். ஒருவர் மம்தா பானர்ஜி மற்றவர் ஜெயலலிதா மூன்றாம் அவர் உத்திரபிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் மாயாவதி. எந்தப்பலமான எதிரியாக இருந்தாலும் சண்டைக்குப் போவதற்கு இவர்கள் தயங்குவதில்லை.

ஆனால், இன்று கருணாநிதிக்கு இக்கட்டான நிலையும் அதேவேளை வாய்ப்பும் தோன்றியுள்ளது. ஏற்கனவே போரின்போது இன அழிப்பைத் தடுக்க கருணாநிதி காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தமிழ் உலகமெங்கும் ஆழமாகப் பரவியிருக்கிறது. அந்தப்பாவங்களையெல்லாம் கழுவுவதற்கு கருணாநிதிக்குக் கிடைத்த சந்தர்ப்பம்தான் ஜெனீவா விவகாரம். இதனை எவ்வாறாவது பயன்படுத்தி தன் பிரதிமையை மேலே கொண்டுவர கருணாநிதி விரும்புகிறார். இதனால் ஜெனீவாவில் அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவாக இருக்க வேண்டும் என்பதில் தி.மு.க. உறுதியாக இருக்கிறது.

இந்தத்தடவை காங்கிரஸ் கட்சி ஒத்துழைக்காவிட்டால், அதனை விட்டுக்கழறுவதைத் தவிர தி.மு.க.விற்கு வேறு தெரிவுஇல்லை. காங்கிரஸிற்காக தனது இருப்பினை தொடர்ச்சியாகப் பலிகொடுக்க தி.மு.க. வினால் முடியாது. தன்னிடமிருந்து ஜெயலலிதா பறித்துக்கொண்ட தமிழ்தேசியத் தளத்தினை எப்படியாவது திருப்பிக் கைப்பற்றுவது என்ற கனவிலும் தி.மு.க. இருக்கிறது.

ஜெயலலிதாவிற்கு இந்த விடயத்தில் பல நெருக்கடிகள். ஒன்று, கருணாநிதியிடமிருந்து அதிர்ஷ்டவசமாகத்தன்னிடம் வந்துசேர்ந்த தமிழ் தேசிய அரசியல் தளத்தினை தொடர்ந்தும் தன் கையில் வைத்திருப்பது. இரண்டாவது, தமிழ் நாட்டில் இருந்து செயற்படும் தமிழ் உணர்வாளர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது. மூன்றாவது, கருணாநிதியை மீண்டும் எழும்பவிடாமல் தடுப்பது. நான்காவது, தமிழ்நாட்டில் கோமா நிலைக்கு சென்றுள்ள காங்கிரஸ் கட்சியை கோமா நிலையிலேயே இருக்கவிடுவது. இவையெல்லாவற்றையும் மேற்கொள்ளவேண்டுமாயின் ஜெனீவா விவகாரத்தை மற்றைய எல்லாத் தரப்புகளையும் விட உயர்த்திப்பிடிக்கவேண்டும்.

நடைமுறையிலும் மற்றைய தரப்புகளைவிட மிக உயரத்திலேயே ஜெயலலிதா இருக்கிறார். பிரதமர் மன்மோகன்சிங்கின் உரைக்குக்கூட வெறுமனவே ஆதரவளிப்பதாகக் கூறினால் மட்டும் போதாது. போர்க்குற்றங்களுக்காக இலங்கை அரசினை இந்தியா கண்டிக்கவில்லை எனக் கூறியிருக்கிறார். ஜெயலலிதா இந்த உயரத்தில் தொடர்ந்தும் இருந்தால், அதனைத் தாண்டுவது கருணாநிதிக்கு இலகுவாக இருக்கப் போவதில்லை.



இந்த மூன்று கட்சிகளுக்கப்பால் இடது சாரிக் கட்சிகள், பாரதீய ஜனதா என்பனவும் ஓங்கிக் குரல் கொடுக்கின்றன. சு.ளு.ளு. இயக்கம் இலங்கைக்கு ஆதரவான நிலையினை எடுத்தாலும் பாரதீய ஜனதா எதிர்ப்பு நிலையிலேயே உள்ளது. பாரம்பரியமாகக் குரல்கொடுக்கும் தமிழ் உணர்வாளர்களைக் கொண்ட கட்சிகள் இந்தத் தடவை தமது தீவிரத்தை மேலும் உயர்த்தியுள்ளன.

இவற்றினை விட தமிழக சிவில் சமூகமும் இந்தத் தடவை முன்னரைவிட அக்கறை காட்டி போராட்டத்தில் குதித்திருந்தது. வழக்கறிஞர்கள், இலக்கியவாதிகள், தொழிற்சங்கங்கள் பலர் இதற்குள் உள்ளடக்கம். மொத்தத்தில் தமிழகத்தின் பொதுக்கருத்துப்பிரேரணைக்கு ஆதரவாகவே இருந்தது. இதனால் மத்திய அரசாங்கத்தின் இருப்பிற்கு அப்பால் தமிழ்நாடு இந்தியர் என்ற அடையாளத்தில் இருந்து அந்நியப்படும் அபாயமும் இருந்தது. ஏற்கனவே ஜம்முகாஸ்மீர், பஞ்சாப், அசாம், மணிப்பூர், திரிபுரா, உட்பட்ட வடகிழக்கு மாநிலங்கள் என்பன இந்தியர்கள் என்ற அடையாளத்தினுள் இல்லை.

ஒருவகையில் பலாத்காரமாகவே மத்திய அரசு இப்பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கிறது. குறிப்பாக வட- கிழக்கு மாநிலங்களிலுள்ள மக்கள் தாங்கள் இந்தியர்களும் அல்லர், வரலாற்று ரீதியாக எமது பிரதேசங்கள் இந்திய ஆளுமைக்குள்ளும் இருக்கவில்லை. இந்தியா பலாத்காரமாக எங்களை ஆக்கிரமித்து நிற்கின்றது. எனக்கூறி வருகின்றனர்.

இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் ஒருபோதும் மாநில மக்களின் கரிசனைகளை கவனத்தில் கொள்வதில்லை. அதனுடன் தொடர்புள்ள வெளியுறவு விடயங்களில் அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் பெரியளவிற்கு கலந்தாலோசிப்பதுமில்லை. இலங்கையுடன் நடைபெற்ற சிறீமா- சாஸ்திரி ஒப்பந்தம் (1964) ,சிறீமா- இந்திராஒப்பந்தம் (1974) , கச்சதீவு ஒப்பந்தம் (1974), இலங்கை- இந்தியா ஒப்பந்தம் (1987) என்பன இவற்றிற்கு சிறந்த உதாரணங்களாகும். இவை அனைத்துமே இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களையும் தமிழகத் தமிழ் மக்களையும் பாதிப்பவை. எனினும் அவர்களுடன் எந்தவிதக் கலந்தாலோசனை இல்லாமல் அவை மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்தங்களை செய்துவிட்டு பின்னர் தமிழ்நாட்டை சமாளிப்பதிலேயே கவனமாக இருந்தனர். சுருக்கமாகக் கூறினால் மாநிலக்கருத்துகள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்ட நிலையே இருந்தது.

இந்தத் தடவைதான் இப்போக்கு முதன் முதலாக மாற்றமடைந்தது. தமிழ்நாட்டின் கரிசனைகளை இனிமேலும் தட்டிக்கழிக்கமுடியாது என்பதுதான் இதற்குக் காரணம். இனிவரும் காலங்களில் தமிழ் நாட்டின் நிலைப்பாடுகளும் இலங்கை தொடர்பான விடயங்களில் தாக்கம் செலுத்தும் எனக் கருதலாம். இதனை மத்தியஅரசு முழு விருப்பத்துடனும் மேற்கொள்கிறது எனக் கூற முடியாது. நிர்ப்பந்தம் காரணமாகவே மேற் கொள்கிறது எனலாம். மாறிவரும் இந்திய அரசியல் சூழலினால் மத்திய அரசியலில் தமிழ் நாட்டின் பாத்திரம் அதிகரித்து வருதலே இதற்குக் காரணம். தமிழ் நாட்டில் மட்டுமல்ல இந்தத் தடவை இந்தியா முழுவதுமே பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டுமென்ற பொதுக்கருத்து நிலவியது.


அமெரிக்காவின் பிரேரணை நிறைவேறியதால், இனி என்ன நடக்கும் என்ற அடுத்த கேள்வி எழுகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை பெரிதாக எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இன்னோர் இலங்கை- இந்திய ஒப்பந்தமாகவே இது இருக்கும். இலங்கை இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. தமிழ் மக்களை சாட்டி இந்தியா தனது நலன்களை பாதுகாப்பதற்காகவே மேற்கொண்டதாகும். தமிழ் மக்களுக்கு கிடைத்தது, எந்தவிதமான சுயாதீனமும் இல்லாத மாகாண சபைகள் மட்டும்தான். வடக்குக் கிழக்கு தற்காலிக இருப்பினைக் கூட பாராளுமன்ற சட்டமாகவோ, அரசியல் யாப்பின் ஒரு பகுதியாகவோ கொண்டு வராமல் வெறும் வர்த்தமானி அறிவித்தலாகவே ஜே.ஆர். ஜெயவர்த்தனா கொண்டு வந்தார். உயர்நீதிமன்றம் அதனை இலகுவாகவே தூக்கி வீசிவிட்டது.தமிழ் மக்களின் எந்தப்பங்களிப்பும் ஒப்பந்த முயற்சியின் போது இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த யோசனைகளும் இந்தியாவால் நிராகரிக்கப்பட்டன.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்மக்களின் நலன்கள் எதுவும் பேணப்படவில்லை. ஆனால் இந்தியாவின் நலன்கள் முழுமையாக பேணப்பட்டது. அதேபோலதான் அமெரிக்காவின் பிரேரணை மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகள் காற்றில் பறக்கவிடப்படும். அமெரிக்காவின் நலன்கள் மட்டுமே பேணப்படும். தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போவது வெட்டிக் குறைக்கப்பட்டதின் மூன்றாவது திருத்தமும் அதனுள் அடங்கியுள்ள மாகாணசபைகளும் தான். அதனுடன் அமைதியடையவேண்டும் என்ற அழுத்தமே அதிகமாக இருக்கும்.

சுருக்கமாகக் கூறினால் ஜெனீவாவின் பெறுபேறு வடமாகாண சபை தேர்தலை நடத்துவதாக மட்டுமிருக்கும். கூட்டமைப்பும் இதனை மட்டும்தான் எதிர்பார்க்கிறது. அதனால் தமிழ் மக்களின் நலன்கள் அடங்கிய எவற்றையும் அது ஜெனீவா களத்திற்கு முன்வைக்கவில்லை. யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்த ரணில் விக்கிரமசிங்கவும் ரவி கருணாநாயக்கவும் தமிழ் சிவில் சமூகத்துடனான சந்திப்பின்போது பதின்மூன்றாவது திருத்தம் மட்டும் தமிழ் மக்களுக்குப் போதும். வட கிழக்கு இணைப்பினைக் கைவிடுகின்றோம், தமிழ் தேசியம், சுயநிர்ணயம் என்பதை கைவி டுகின்றோம் என கூட்டமைப்பினர் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு தெரிவித்ததாக கூறியுள்ளனர். வேண்டுமானால் வெளிநாட்டு இராஜதந்திரிகளைக் கேட்டுப்பாருங்கள் என்றும் கூறியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைவிட்டவற்றை நீங்கள் ஏன் தூக்கிப்பிடிக்கின்றீர்கள் என்பதுதான் தமிழ் சிவில் சமூகத்தினை நோக்கிய ஐக்கிய தேசியக் கட்சியினர்எழுப்பியகேள்வி. இந்தக் கேள்வியினை தமிழ் சிவில் சமூகத்தினைசந்திக்க வருகின்ற வெளிநாட்டு இராஜதந் திரிகளும் பல தடவைகள் கேட்டுள்ளனர்.

வெளிநாட்டு இர்ராஜதந்திரிகளுக்கு கூறும் இந்தக் கருத்துக்களை தமிழ் மக்களுக்கு நேரடியாகக் கூறுவதுதான் கூட்டமைப்பின் அரசியல் நேர்மையாக இருக்கும். அவ்வாறு கூறினால் ஐயாயிரம் வாக்குகளைக்கூட தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்புப் பெறுவது சந்தேகம். கடந்த தேர்தலில் கூட்டமைப்பினர் கிழக்கு மாகாணத்தில் பிரசாரம் செய்தபோது வடகிழக்கு இணைப்பிற்காக எங்களுக்கு வாக்களியுங்கள் என்றே கேட்டனர். இப்போது அம்மக்களை ஏமாற்றுகின்றனர். அரசாங்கத்துக்கு மட்டும் தமிழ் மக்களை ஏமாற்றத்தெரியும் என்றில்லை. கூட்டமைப்புக்கு ஏமாற்றத்தெரியும் என்பதை நிரூபித்துள்ளனர்.




இப்போதுதான் கூட்டமைப்பு ஜெனீவாவிற்கு செல்லாததற்கான காரணம் முழுமையாகத் தெரிகின்றது. பதின்மூன்றாவது திருத்தம் தான் தீர்வு என்றால் அதனை ஜெனீவாவிற்கு சென்று கூறுவது தேவையில்லைதானே. இது விடயத்தில் கூட்டமைப்பு செல்லாமல்விட்டது அதிக நன்மைஎன்றே கூறலாம். ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் கூட்டமைப்புத் தவறுகள் செய்வது உண்மைதான். அதனை திருத்த முற்ப டுங்கள் உடைத்துவிடாதீர்கள் எனக் குறிப்பிட்டார். கூட்டமைப்பினைத் திருத்துவதைவிட நாய் வாலை நிமிர்த்துவது இலகு.

கூட்டமைப்பு ஒரு தமிழ் தேசியக்கட்சியாக இல்லாமல் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் ஒரு தமிழ் கட்சியாக இருப்பது என முடிவு செய்துவிட்டது. இதனை சர்வதேச சமூகத்திற்கும் தெரிவித்துவிட்டது. இதன் பின்னர் தமிழ் தேசிய அபிலாசைகளை கூட்டமைப்பிடம் இருந்து எப்படி எதிர்பார்க்கமுடியும்.

அமெரிக்காவின் ஜெனீவாப் பிரேரணை சாதித்த விடயம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒன்றே ஒன்றுதான். தமிழ் மக்களின் விவ காரம் சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாக்கு வதற்கு ஒரு களத்தை உருவாக்கியமைதான் அது. இதற்காக அமெரிக்காவிற்கு நன்றி கூற தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளனர். இதைவிட வடகிழக்கில் இராணுவ நிர்வாகத்தின் இறுக்கம் சற்றுக் குறைவடையலாம். இந்நிலை தமிழ் தேசிய சக்திகள் செயற்படக்கூடிய ஒரு ஜனநாயக அரசியல் வெளியினை உருவாக்கித் தரும். சற்று அழுத்தம் கொடுத்தால் சிறைகளில் இருப்போர் விடுதலையாகக்கூடிய நிலை உருவாகலாம். அதற்கு மேல் பிரேரணை எதையும் சாதிக்கப்போவதில்லை.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதன் அரசியல் வரலாற்றில் இதனை ஒரு படி எனக்கூறலாம். தமிழ்த் தேசிய சக்திகள் செயற்படக்கூடிய சர்வதேச வெளியினை இவ் ஜெனீவாக்களம் போதியளவு திறந்துவிட்டுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பி அடிக்கடிக் கூறுவார்.



ஒரு தேசியப் போராட்டம் தேசிய அரசியலினால்தான் உருவாகும்.ஒரு தேசியப் போராட்டம் தேசிய அரசியலினால்தான் வளரும்.

ஆனால் ஒரு தேசிய போராட்டத்தின் வெற்றியை சர்வதேச அரசியலே தீர்மானிக்கும். சர்வதேச அரசியலை எமக்கு சாதகமாகக்கொண்டு வருவதற்கு இந்தப்படியைக் கவனமாகப்பயன்படுத்துவதே தமிழ்த்தேசிய சக்திகளினது எதிர்கால வேலைத்திட்டமாக இருக்கவேண்டும்.

**நன்றி: இணையம்**

# அமெ.வின் அழைப்பை ஏற்றுச் சென்றிருந்தால் நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது

## பீரிஸ் கூறினாராம்

(கொழும்பு)

**ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக பிரேரணை நிறைவேற்றப் பட்டதால் அமெரிக்காவைவிட இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அதிக சந்தோசத்தில் இருப்பதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை இந்தியாவின் ஆதரவுடன் ஒன்பது மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. மனித உரிமைகளுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவரான மஹிந்த சமரசிங்கவின் தலைமையின் கீழ் தன்னை ஜெனீவா அனுப்பியதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தன்னை மட்டம்தட்டுவதற்காக இவ்வாறு திட்டமிட்டு செயற்பட்டதாகவும் தனக்கு நெருக்கமானவர்களிடம் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருந்தார்.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரது ஜெனீவா செயற்பாடுகளையும் இராஜதந்திர நகர்வுகளையும் ஆரம்பம் முதலே விமர்சித்து வந்தார்.

முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிசுடன் இணைந்து தனக்கு *ஜெனீவா தோல்வி பீரிஸ்* என்ற பட்டப் பெயரை சூட்டி தன்னை மட்டம்தட்டியதற்கு இந்தத் தோல்வி சிறந்த அடியாகவும் பாடமாகவும் இருக்கும் என அமைச்சர் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்து சந்தோசப்பட்டதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக சர்வதேசம் தன்னையே ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இந்தத் தோல்விக்கு தானே பதில் சொல்ல வேண்டியிருக்கும் எனவும் குறிப்பிட்ட அவர் இந்தப் பிரேரணை தோற்கடிக்கும் வழிமுறைகளைக் கண்டறிய இருந்த சிறந்தவொரு சந்தர்ப்பத்தை ஜனாதிபதி தடுத்து விட்டதாகவும் அமெரிக்காவின் அழைப்பை ஏற்று தான் அங்கு சென்றிருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது எனவும் கூறியுள்ளார். எனினும் எக்காரணம் கொண்டும் அமெரிக்காவிற்கு செல்ல வேண்டாம் என ஜனாதிபதி விதித்த கடுமையான உத்தரவே இந்தத் தோல்விக்கு அடிப்படை வித்திட்டதாகவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

## பொலிஸாரால் இன்ஸ்பெக்டர் கைது

மதுபோதையுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை ஜம்பட்டா வீதி பொலிஸ் காவலரணில் சேவையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளனர்.

இந்த இன்ஸ்பெக்டர் நேற்று முன்தினம் 9.30 மணி அளவில் ஜம்பட்டா பொலிஸ் காவலரணில் சேவையிலிருந்த உத்தியோகத்தர்கள் சிலருக்கு இடையூறு விள்ளவித்ததாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். கைது செய்யப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் சேவையாற்றுவதாக தெரியவந்துள்ளதுடன் அவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார். (அ-2)

# இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்படலாம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியான விசாரணைகள் நடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஒரு ஆண்டின் பின்னர் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்படக் கூடுமென ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்படும் வரையில் காத்திருக்கக் கூடாது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிரமமான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் நாட்டையும் மக்களையும் நாட்டின் இறையாண்மையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் 2010 ஆம் ஆண்டில் இடைக்கால பரிந்துரைகள் செய்யப்பட்டன.

கைதிகள் பற்றிய தகவல்களை வெளியிடுதல், ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைதல் உள்ளிட்ட சில முக்கிய பரிந்துரைகள். எனினும் இந்த பரிந்துரைகள் இதுவரையில் அடுல்படுத்தப்படவில்லை.

இவ்வாறான காரணிகளினால் மனித உரிமை குழுவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஜெனீவா பிரேரணை தொடர்பில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் முட்டாள் தனமான கருத்துக்களை வெளியிட்டு நாட்டை மேலும் நெருக்கடி நிலைமக்கு இட்டுச் செல்கின்றனர்.

அரசாங்கம் மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்லாது மனித உரிமை குழுவின் அமர்வு பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென லக்ஸ்மன் கிரியல்ல கோரியுள்ளார்.

ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து பொதுவான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பொதுவான பொறிமுறைமை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஆளும் கட்சி இந்த பொறிமுறைமையை உருவாக்க வேண்டும். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஒரு வருட காலத்திற்குள் அமுல்படுத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரேரணையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நாடு தேவையற்ற பிரச்சினைகளையும் அழுத்தங்களையும் எதிர்நோக்க நேரிடும். அமுல்படுத்தக் கூடிய பரிந்துரைகள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். ஏனைய காரணிகள் தொடர்பில் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தி பின்னர் அமுல்படுத்த முடியும் என எதிக்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் முயற்சிகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (அ-2)

# குழந்தையின் சிகிச்சைக்கென பணம் வசூலித்த மோசடிக் கும்பல்

## சிலாபம் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

செவிப்புலனற்ற பெண் குழந்தையொன்றுக்கு சிகிச்சையளிக்க நிதி சேகரிப்பதாகக் கூறி சிலாபம் நகரில் நிதி சேகரித்துக் கொண்டிருந்த மோசடிக் கும்பலொன்றை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூன்று பெண்களும் 5 ஆண்களுமாக வாடகைக்கு அமர்த்திய வான் ஒன்றில் கிராமம் கிராமமாகவும் சென்று நிதி சேகரித்துள்ளனர்.


சிலாபம் நகரில் இவர்கள் நிதி சேகரித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து பெருந்தொகை பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் கம்பஹா தெல்கொட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் மாதம்பை இஹலகம பகுதியிலுள்ள பெண் குழந்தையொன்றுக்கு செவிப்புலன் தொடர்பாக தீவிர சிகிச்சையளிக்க வேண்டும் என டாக்டர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இச்சிகிச்சைக்காக செவிப்புலன் கருவி பயன்படுத்த வேண்டும் எனவும் டாக்டர்கள் கூறியுள்ளனர். இதற்காக பெருந்தொகை பணம் தேவைப்படுவதாகக் குழந்தையின் பெற்றோர் பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ளனர்.

இந்த விளம்பரத்தை கண்ட மேற்படி நபர்கள் தம்மால் தேவையான உதவியைச் செய்ய முடியும் எனக்கூறி டாக்டர்கள் வழங்கிய பரிந்துரை ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு நிதி சேகரிப்பதற்கான துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு நிதி சேகரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சேகரித்த நிதியிலிருந்து சிறிதளவு பணத்தை குழந்தையின் தாய்க்கும் கொடுத்திருப்பதும் தெரிய வந்துள்ளது. (அ-2)





ஜே.எஸ்.ராஜ் எழுதிய *உயிர்ச்சமர்* கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.இராஜேஸ்கண்ணன் வெளியீட்டுரை ஆற்றுவதையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாசிடமிருந்து மங்களா காட்சியறை உரிமையாளர் குமராசாமி ஜெயந்தன் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### நிசப்தத்தின் தாகம்

என் ஊரின் பனையோலைக்
கருக்கறுத்த காயமாய் பிளந்து கிடந்தது
உன் நினைவால் அறுபட்ட இதயச் சதை
ஏக்கங்கள் புரையோடிய நிகழ்காலத்தில்
குறியீட்டுப் பிணமாய் மிதந்து நடந்தேன்
நான் பூத்தேன் உன் மௌன செடியில்
வண்டுகள் மொய்க்கும் உன் முகத்திரையை
கழற்று அது நீயா? வேறொருத்தியா?
இந்த தேசத்தில் என் உரிமைகள்
சிலுவையில் அறையப்பட்டு கிடந்தது
நீ முத்தமிடுகிறாய் என்னை
அறைந்த ஆணிகளுக்கு!
மரணத்தை நேசிக்க ஆரம்பித்து விட்டார்கள்
அதிகமாய் இத் தேசத்து மனிதர்கள்
பிறப்பென்பது விலங்காயினும்
மறு ஜென்மத்தைவெறுக்கின்றார்கள்
நம் தமிழர்கள்!

எம்.நேதா
நெடுந்தீவு

### அவரவர் பார்வையில் எதிர்பார்ப்பு

புல்லின் நுனியில் புதுமை பிறக்கும்
புல்லாங்குழலில் புரட்சி வெடிக்கும்
என் மனதில் கவிதை பிறக்கும்
மக்களின் வாழ்வில் நிம்மதி கிடைக்கும்

க.செல்வமலர்
திருநெல்வேலி சிறுவர் இல்லம்

### வரதட்சணை

கல்யாண சந்தையில்
பெற்றவர்கள் பிள்ளைகளை
கூறுபோட்டு ஏலம் கேட்டு
பெறும் தொகை

ம.புவிலக்சி
மட்டக்களப்பு

### காதல்

மனங்கள் அலைபாயும்– அதன்
ரணங்கள் வலி தாங்கும்
குணங்கள் திசைமாறும்– சொந்தக்
குசலம் தலை தாளும்
நிஜங்கள் நிழலாகும்– பல
நினைவு மறந்தோடும்
கணங்கள் கனவாகும்
காதல் உதயத்தின்போது...

மு.சுகந்தினி
அச்சுவேலி தெற்கு

### கருவறைக் கண்ணீர்

முகம் தெரியாத் தாயே
உன்னை வணங்குகிறேன்
உன் கருவறையில் இருக்கும்
கடைசி மகன் எழுதும்
கண்ணீர் கடிதம்
உன் வயிற்றுச் சுவர்களில்
ஏன் சுட்டு வீரன் தீட்டும்
ஓவியம் புரிகிறதா தாயே!
நீ பிரசவித்திருக்கும்
எனது முன்னவர்களைக்
காணவில்லையென்று– நீ
கதறும் ஒலி –என்
காதுகளுக்குத் கேட்கிறதம்மா!
காணாமல் போன சகோதரன்
காலில்லை அப்பா
பூப்பெய்திய அக்கா
ஓட்டை வீட்டில்
கிழிந்த துணியுடன் நீ...
உங்களுக்கு நடுவில்
நான் ஏனம்மா?

அ.சுசி
இம்மாஸ்நகர் அக்கராயன்

### இமயம் தொட...

புலிகள் வாழும் காட்டில் தான்
புள்ளிமான்களும் வாழ்கின்றன
நல்லமனிதன் வாழும் பூமியில் தான்
நயவஞ்சகரும் வாழ்கின்றனர்
உள்ளம் பெரும் கோவில்
அதில் உண்மை தான் கடவுள்
மனிதர் மனதை மாசாக்கி விட்டு
கடவுளைத் தேடுகின்றர்
கடவுளோ நல் மனிதனைத் தேடி...


மாவை நா:கஜேந்திரன்

### பூலோக நட்பு

கண்ணுக்கு மணியாக
வானத்துக்கு நிலவாக
கடலிலே கலந்த ஆற்று நீராக
நாளத்தில் ஓடும் உதிர ஓடையாக
இசைக்கும் இருபாதி தளமாக
புதுப்பிக்க இருக்கும்
சேது அணைப்பாலமாக
கால் மூச்சு அரை மூச்சு
வாங்கிய போதும்
உடலோடு உயிர்சேர்ந்து
இருப்பதுவாக
நண்ணிய அன்புரு
நிறுத்திட்டமாக நட்ட பூ

ஆ.முல்லை திவ்யன்

## மௌனத்தின் தேடல் - 114



### நினைவுடன்...

அண்ணனின் மடியில்
அழகிய சிசுவும்
பண்ணிசை படித்திட
தூங்கினாள் போலும்
கண்ணெனத் தங்கையை
காத்திடும் சோதரன்
கண்ணயர்ந்தேயவள்
தலையில் சாய்ந்து
பிஞ்சுகள் இரண்டும்
உறங்கிடும் காட்சி
நெஞ்சத்தில் ஆயிரம்
நினைவுகளை மீட்கும்
அஞ்சிடா வாழ்வில்
மடிந்த தாய் தந்தையை
குஞ்சுகள் எண்ணிக்
கொண்டிடும் உறக்கம்

ரா.வாசனா
நல்லூர்

### விம்மும் பிஞ்சுகள்

சொல்லமுடியாத துயரம் நம்முள்
சொல்லியழத்தான் யாரிருக்கா?
நானுன் தாயாய் நீயென் சேயாய்
காலத்தின் கட்டளையாய்
காலனவன் சதிவலையையா?

எஸ்.சிவகுமார்
கரணவாய் மேற்கு

### பரிதவிப்பு

பச்சிளம் குழந்தையும்
பருவம் அறியாப் பாலகனும்
என்ன தவறு செய்தனர்
எதற்காக இந்த
கருணையற்ற தண்டனை

இ.கலைவாணி
பருத்தித்துறை

### அன்பு ஓவியமாய்

இடிந்த மாடிப் படியில் குடியிருக்கும்
அடி மனதில் ஆழம்பதிக்கின்ற
கோடி அர்த்தம் தருகின்ற
முடிந்த கொடிய யுத்தத்தின்
முடியாததுயரச்சித்திரமாய்
மடியில் தம்பியை தாங்கியே
விடியும் வரைக்கும் அமர்ந்திருக்கும்
நெடிய உறக்கத்திலும் அன்பு தான்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### பாசத்துடிப்பு

நஞ்சனைய வெஞ்சமரில்
அழிவுற்ற அம்மாவை எண்ணி
கதறி அழும் தம்பியை அண்ணன்
பாசத்துடிப்போடு அள்ளி எடுத்து
மார்போடணைத்து அன்பு
முத்தங்கொடுத்து ஆறுதல் கூறுகின்றான்
இது தான் பாசத்தின் துடிப்பு

துரை
தென்மட்டுவில்

### பரமன் வருவான்

ஓலங்களும் கோசங்களும் ஒன்றும்
செய்யாத பின்பு மௌனமாய்
தியானத்தில் மூழ்கியுள்ளார்-அன்று
பன்றிக்கும் பால்கொடுத்த பரமன்
இன்று வந்து தங்களையும்
காப்பான் எனநினைந்து

ராசாவி
அல்வாய்

### மனிதம்

தானாடா விட்டாலும்
தயவுள்ள அன்புறவு
இருக்கு மட்டும்
தாழ்ந்து போகாது
தரணியில் மனிதம்
தரங்கெட்டு விடாது
புவியில் மானிடம்

கமலாஇளங்கோவன்

### பசி

பசியால் நோகிறது
உன் வயிறு தம்பி
பாசத்தால் அழுகிறது
என் மனது வெம்பி
அணைக்க ஒருகரம்
இல்லை ஊரினிலே
அநாதைகளாய் கிடக்கின்றோம்
வீதியிலே

விஜி
ஊறணி

### யாரறிவார்?

அன்போடு அரவணைக்கும்
அன்னையைப் போல்...
சகோதர பாசத்தை...
அரவணைத்து தூங்கும்..
இவர்களின் மனத்துன்பத்தை-
யாரறிவார்...?

வீ.அருள்ராஜா
கொம்மாந்தறை

### வடிக்கின்றேன்

நெஞ்சை உருக்கும்
காட்சிதனை தந்து
கவி கேட்ட ஓவியரே
கவி வடிக்க முடியாமல்
நான் கண்ணீரை வடிக்கின்றேன்

சு.சிவவடிவேல்
இணுவில் மேற்கு

### வாழவைப்போம்

மனச்சாட்சி மனிதநேயம்
மிக்கோரே பெற்றவரை
இழந்து வாழ்வதற்கே வழி
தெரியாமல் தவிக்கும்
இப்பாலகர்களை காப்பாற்ற
முன்வாருங்கள்!

அ.புவனா
வடவரணி

### ஆதரிப்பார் யார்?

எத்தனையோ உண்மைகள்
மண்ணில் புதைப்பட்டது
அதுபோல் எம்மையும்
புதைக்கப்பார்த்தார்கள்
மறப்போமா போர்
தந்த வலியை
சொந்தங்கள் இறந்துபோயின
இன்று றோட்டோர
நிழல் தேடி நானும்...


தவம்-ராஜன்
குட்டியப்புலம்

### தேசம் தந்த வரம்

நீயே தாய் மடியில்
தாங்கப்பட வேண்டியவன்-இன்று
நீயே தாயாக மடி மீது
தாங்குகின்றாய்- இதுதான்
உன் தேசம் தந்த வரமா?

இ.தர்மனா
பருத்தித்துறை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -115



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 30.03.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## திறப்பு விழா

பொருளாதார அமைச்சின் நிதியுதவியுடன் அமைக் கப்பட்ட பூநகரி வாடியடி கால்நடை வைத்தியர் அலுவலகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதமவிருந் தினராக வட மாகாணபிரதமசெயலாளர் திருமதி ஆர்.விஜய லட்சுமி, சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண ஆளு நரின் செயலாளர் எல்.இளங்கோவன், விவசாய அமைச் சின் செயலாளர் யூ.எல். எம்.வரால்டீன், கிளி.மாவட்ட அரச அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் ஆகியோர் கல ந்து சிறப்பிக்கவுள்ளனர். பிரதம விருந்தினர் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-7-84)

# கொக்கிளாய் பகுதியில் இந்துக் கோயிலை இடித்து விகாரை அமைப்பதை நிறுத்துங்கள்

## யோகேஸ்வரன் எம்.பி. பிரதமருக்கு கடிதம்

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் மக்களின் நீண்டகால வழிபாட்டு தலமாக விளங்கிய விநாயகர் ஆலயத்தை உடைத்து அங்கு பௌத்த விகாரை கட்ட முற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என பாரா ளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் பிரத மருக்கு அனுப்பிய மடலில் குறிப்பிடப்பட்டு ள்ளது.

இது தொடர்பாக மத விவகார அமைச்சரும் பிரதமருமான தி.ம.ஜயரத்னவுக்கு அனுப்பிய மடலில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கு பகுதியில் யுத்த சூழல் முடிவடைந்தும் இனப்பிரச்சினையை தீர்த்து விட்டோம் எனக்கூறும் இவ்வேளை தங்க ளுடன் இணைந்துள்ள பௌத்த பிக்குகளின் ஆலோசனையில் இந்து மக்களின் வாழ் விடங்களில் பௌத்த மதத்தலங்களை புதி தாக ஸ்தாபிப்பதும் இந்துக் கோயில்களை இடித்த பௌத்த மதத்தலம் ஸ்தாபிப்பதும் கடந்த மூன்று வருடமாக நடைபெற்ற வரு கின்றது.

இந்நடவடிக்கையானது, அனைத்து இந்து மக்களையும் மிகவும் வேதனைப் படுத்தியுள்ளது. தங்கள் மீது மத ரீதியாக இந்துமக்கள் மிகவும் நம்பிக்கை வைத்தி ருந்தனர். ஆனால், இச்செயற்பாடுகள் இந் துக்கள் தங்கள் மீது கொண்ட நம்பிக்கையை தகர்ப்பதாக அமைந்துள்ளது.

உண்மையிலே எக்காலத்திலும் பௌத்த குடியிருப்புக்கள் இல்லாத பகுதிகளில் பௌத்த விகாரைகள் முளைக்கின்றது. அது மட்டுமன்றி பாதுகாப்பு தரப்பினரின் வழி பாட்டு இடங்களில் தற்காலிகமாக வைக்கப் பட்ட பௌத்த மத வழிபாட்டு சிறு கட்டடங்கள் தற்போது பெரு ஆலயமாக விஸ்தரிக்கப்படு வதையும் பாதுகாப்பு படை அதிலிருந்து வெளி யேறிய பின்பும் அது பெரிதாக பலப்படுத்தும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது.

கொக்கிளாய் பகுதியில் பௌத்தங்கள் வாழ்ந்த வரலாறு இல்லை. அங்கு இந்துக் களும் சிறிதளவு கிறிஸ்தவ மக்களுமே உண்டு. இவ்விடத்தில் இந்துக் கோயிலை இடித்து பௌத்த விகாரை கட்ட முற்படுவதை இட்டு மிக வேதனை அடைகிறோம்.

அத்துமீறிய வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த விகாரைகள் ஸ்தா பிக்கப்படுவதும் இந்துக்கோயில் இடிக்கப் படுவதும் சார்பாக பல தடவை நேரடியாகவும் பாராளுமன்றம் மூலம் கடிதம் அனுப்பியும் தங்கள் கவனத்துக்கு கொண்டு வந்துள் ளேன்.

எனவே, கொக்கிளாயில் நடைபெறும் இச்செயற்பாட்டை உடனடியாக நிறுத்து மாறும் இந்து மக்களின் வடக்கு, கிழக்கு வாழ்விடங்களில் இந்துக் கோயில்கள் இடிக் கப்பட்டு அங்கு பௌத்த விகாரைகள் தாபிக் கப்படுவதை நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் தங்களது நடவடிக்கை சார்பாக விபரத்தை எதிர்பார்க்கின்றேன் என பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு !

### அதிரடி விலைக்கழிவில் Computer வாங்க..

| SDSCOM - I | SDSCOM - II | LAPTOP |
|---|---|---|
| Processor Intel Dual Core 3.0 | Processor Intel i3 3.2 | HP 430 Core i3/2GB/320GB ... |
| Mother Board-Biostar G41 | Mother Board-Biostar i7 Supt. | HP 430 Core i5/2GB/320GB ... |
| 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston | HP 4530 Pro Book Core i3/2GB/320GB ... |
| 300GB Hard Disk Drive | 1TB Hard Disk Drive | HP 4530 Pro Book Core i5/2GB/320GB ..... |
| Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX | HP - 630 Core i3/2GB/320GB... |
| DVD / RW Writer | DVD / RW Writer HP | HP - G6 Core i3/2GB/320GB .... |
| Monitor LCD 19" Viewsonic | Monitor LCD 19" Viewsonic | Thoshiba L 640 D/Corei3/2GB /320GB .. |
| USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad | |
| Multi Media Stereo Speaker | Multi Media Stereo Speaker | |
| USB Keyboard | USB Keyboard | |
| UPS 650VA | UPS 650VA | |
| Price :- Rs. 51,400/= | Price :- Rs.65,700/= | |
| Free : Panda Antivirus 2012 Original | Free : Panda Antivirus 2012 Original | |

★ 1- 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்! ★கையிருப்பில் உள்ளவரை மட்டுமே.

**Our Services**

Sales, Repair & Maintenance, Software Developments and all type of Security solution etc..

**Authorized Dealer for..**

Hp, Dell Products
Biostar Mother Boards
T P Link Products
Viewsonic Products
Havit Products , EAST
Panda Antivirus and Etc...

வரவேற்கின்றோம்! மொத்த / சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அனைத்துவிதமான Computer, Computer சார் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தேவைகளுக்கும் நாடுங்கள்....

**SDS Computer Services**

No. 42/1, College Road, Jaffna.

J/Hindu College மைதானத்திற்கு அருகாமையில்...

T/P:- 021-2224500,0215-100105 ,0777-874705








## Newzeland இல் உயர் கல்வியும் பட்டப்படிப்புக்குப்பின் நிரந்தர வதிவிட Visa ஒழுங்குகள்

**எமது ஸ்தாபனத்தின் கல்விச்சேவையை யாழ்ப்பாணம் வரை விஸ்தரித்துள்ளோம். இதன்மூலம் Newzeland இல் உயர் கல்வி கற்றபின் அந்நாட்டில் தொழில்வாய்ப்புடன் நிரந்தர வதிவிட அனுமதியையும் பெற்றுக்கொடுக்கின்றோம்.**

**தகுதிகள், கல்வித்தகைமைகள்**



- G.C.E. O/L, A/L
- Diploma கற்கை நெறியை முடித்த வர்களுக்கான மேலதிக கற்கை நெறிகள்.
- Diploma Under Graduate கற்கை நெறியின் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருப்பவர்கள்.
- Diploma அல்லது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று அதனை இறுதிவரை தொடர முடியாதவர்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள தகைமை உடையவர்களுக்கு இரண்டு மாத காலத்துக்குள் Newzeland இல் மேற்படிப்பை தொடர எமது நிறுவனம் சகல ஒழுங்குகளையும் செய்து கொடுக்கிறது.

எமது நிறுவனம் உங்களுக்குரிய Sponcer ஒழுங்கினையும் செய்து Visa வினை பெற்றுக் கொடுக்கின்றது.

(7798)

**தொடர்புகளுக்கு:-**

Tel:-0778980652
Fax:-0112321074
Email:-sin21ne@gmail.com

RAINBOW TRAVELS
113,CHATHAM St
COLOMBO-01



# பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பில் சீனாவும் இந்தியாவும் இணையவேண்டும்

## ஹிலாரி அழைப்பு



(வோஷிங்டன்)

முக்கியமான சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஊழல் நடப்பதை தடுக்க பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பில் இந்தியாவும் சீனாவும் உறுப்பினர்களாக வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு உருவாக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த அமைப்பில் 38 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

உலக நாடுகளின் பொருளாதார பிரச்சினை, சுற்றுச்சூழல், கல்வி போன்ற பல முக்கிய விடயங்கள் குறித்து இந்த அமைப்பு புள்ளிவிபரங்கள் திரட்டி பிரச்சினைகள் தீர்ப்பதற்கான வழிமுறைகள், கொள்கைகளை வகுத்து கொடுக்கின்றது. இந்த அமைப்பில் இந்தியாவும் சீனாவும் சேர வேண்டும் என்று ஹிலாரி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் கூறியதாவது,

வளர்ந்து வரும் நாடுகளில் ஊழல் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. முக்கியமான சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஊழல் நடப்பதால் பணிகள் பாதிக்கப்படுகின்றன.

எனவே ஊழலை தடுக்கும் நோக்கில் ஓஇசிடி செயற்பட்டு வருகின்றது. இந்த அமைப்பில் உள்ள நாடுகளின் கம்பனிகள் சர்வதேச அளவில் வர்த்தக பரிவர்த்தனை நடத்தும் போது ஊழல் நடக்காமல் தடுக்க வகை செய்யும். ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் மூலம் தடை கொண்டு வர இயலும். எனவே பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் இந்தியா, சீனா, இந்தோனேசியா, சவுதி அரேபியா போன்ற நாடுகளும் இந்த அமைப்பில் சேர வேண்டும் என்று கூறிவருகின்றோம். (அ-2)

# 2016 ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஹிலாரி கிளின்டன் களம் இறங்குவார் என்று அந்த கட்சியின் எம்.பி கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் நடக்க உள்ளது. அதில் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிருகின்றார். குடியரசு கட்சி சார்பில் ரோம்னி முக்கிய வேட்பாளராக இருக்கின்றார்.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக பதவி வகிக்கும் ஹிலாரி கிளின்டனை அடுத்த 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக அறிவிக்கலாம் என்று நியூயோர்க் எம்.பி. கிறிஸ்டன் ஜில்லி பேண்ட் கருத்து தெரிவித்துள்ளார்.

இன்டர்நெட்டுக்கு அளித்த பேட்டியில் பிறிஸ்டன் கூறுகையில்,

ஜனாதிபதி பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் ஹிலாரி என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழக அகதி முகாமிலுள்ள தமிழ் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

## முதல்வர் ஜெயலலிதா உத்தரவு

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதன்மூலம் ஆயிரம் இலங்கை தமிழர் அகதி மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதற்காக அரசுக்கு 20 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும். இலங்கை அகதிகள் முகாம்களில் தற்பொழுது இயங்கி வரும் 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு தடவை மானியமாக ஒவ்வொரு குழுவிற்கும் 10 ஆயிரம் ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதனால் அரசுக்கு 41 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும்.

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் வாழும் தமிழர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அந்த முகாம்களில் வசிக்கும் மக்களின் குடிநீர் வசதியினை மேம்படுத்தும் பொருட்டு 4 கோடியே 33 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் முகாம்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளை சீர் செய்தல், வீதிகளை சீரமைத்தல், நூலக கட்டம் கட்டுதல், கூட்டுறவு அமைத்தல், கூடுதல் கழிப்பறை மற்றும் குளியலறை ஏற்படுத்தல், சமுதாய கூடங்கள் அமைத்தல், மின் கம்பங்கள் மற்றும் தெரு விளக்கு அமைத்தல், சமையலறை கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கும் பணிகளுக்காக 20 கோடியே 66 இலட்சத்து 62 ஆயிரம் நிதி ஒது;கீடு செய்தும் ஆக மொத்தம் இலங்கை அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் அனைவரும் விரிவுபடுத்தவும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

# இணையத்தளங்களை பார்த்தால் சிறை

தீவிரவாதிகளின் இணையதளங்களை தேடி பிடித்து படிப்பவர்களுக்கு சிறை தண்டணை விதிக்க பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசி திட்டமிட்டுள்ளார். அவர் கூறுகையில், சர்வதேச அளவில் அதிகரித்து வரும் தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டியது அவசியம். இதில் பிரான்சும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே தீவிரவாதிகளின் இணையத்தளங்களை படிப்பவர்கள், தீவிரவாதிகளை உருவாக்குவது போன்ற கருத்துக்களை இணையத்தில் வெளியிடுபவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றார். (அ-2)



தென்கொரிய தலைநகர் சியோலில் நடைபெறவுள்ள அணு சக்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரேசில் துணை ஜனாதிபதி மிக்கேல் டிமர் மற்றும் அரசு பிரதிநிதிகள் வருகை தந்திருப்பதை படத்தில் காணலாம்.

# இந்தியாவில் காசநோய் தாக்கம் அதிகரிப்பு

உலக காசநோய் ஒழிப்பு தினத்தையொட்டி சமூக சேவை மையம், இந்திய மருத்துவ சங்கம் சார்பில் சேலத்தில் நேற்று முன்தினம் சிறப்பு கருத்தரங்கு நடத்தியது. ஐ.எம்.ஏ.காசநோய் ஒழிப்புத்திட்டம் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் மன்னர் மன்னன் பேசியது,

காசநோய் எயிட்சைவிட ஆபத்தானது. இந்தியாவில் ஆண்டுதோறும் காச நோயால் 15 இலட்சம் பேர் பாதிக்கப்படுகிறார்கள். 3 இலட்சம் பேர் மரணம் அடைகிறார்கள். காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அருகில் 15 நிமிடம் இருந்தால் காச நோய் கிருமி தொற்று பரவும் அபாயம் உள்ளது. காசநோயை 6 மாதம் தொடர்ந்து சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும்.

காசநோய் குறித்து ஆய்வு மையம் தமிழ்நாட்டில் 2 இடங்களில் செயல்படுகிறது. காசநோய் தொற்றுக் கண்டறிய நீண்டகாலம் ஆகிறது. இந்நிலையில் 2 மணி நேரத்தில் காசநோய் தொற்று குறித்து கண்டு பிடிக்கும் கருவி குறித்து சி.எம்.சி ஆஸ்பத்திரியில் ஆராய்ச்சி நடந்து வருகிறது என அவர் கூறினார். (அ-2)

# பிக்பென் கோபுரத்திற்கு எலிசபெத்தின் பெயர்




பிரிட்டன் ராணியாக எலிசபெத் மகுடம் சூடப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி வைரவிழா கொண்டாட்டங்கள் நடைபெறுகிறது.

இதன் ஒரு பகுதியாக அவரை கௌரவிக்கும் விதத்தில் வெஸ்டமின்ஸ்டர் அரண்மனையில் உள்ள பிக் பென் கோபுரத்திற்கு எலிசபெத் கோபுரம் என்ற பெயர் சூட்டுமாறு பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோபுரத்தின் உண்மையான பெயர் கிங்ஸ் கோபுரம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஊழலை வெளியிடுவோருக்கு பாதுகாப்பு கோரி அன்னாஹசாரே போராட்டம்



ஊழலை அம்பலப்படுத்துவோருக்கு பாதுகாப்பு கோரி டில்லியில் இன்று தர்ணா போராட்டம் நடைபெறும் என்று அன்னா ஹசாரே அறிவித்துள்ளார்.

காந்தியவாதியும் சமூக ஆர்வலருமான அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிராக வலிமையான லோக்பால் சட்ட மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார்.

டில்லியில் அவர் நடத்திய காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்துக்குப் பின் நாட்டு மக்கள் மத்தியில் ஊழலுக்குஎதிராகபெரியஅளவில்விழிப்புணர்வும் எழுச்சியும் ஏற்பட்டது.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட லோக்பால் மசோதா மிகவும் பலவீனமானது என்றும் இதனால் எந்த பயனும் இல்லை என்றும் அன்னா ஹசாரே கூறி வருகின்றார்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக போராட்டங்களை நிறுத்தி வைத்திருந்த அன்னாஹசாரே தற்போது மீண்டும் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்து இருக்கின்றார். அது குறித்து நேற்று முன்தினம் டில்லியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

மத்திய அரசு எங்களுக்கு துரோகம் இழைத்துவிட்டது. இது நாடடிற்கு நல்லது அல்ல. அரசின் லோக்பால் வரைவு மசோதாவால் ஊழலை கட்டுப்படுத்த முடியாது. நீண்டகால அவகாசத்துக்குப் பின்னும் இந்த பிரச்சினையில் ஒருமித்த கருத்தை அரசால் உருவாக்க முடியவில்லை. இது வருந்தத்தக்கது. எனவே நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றேன்.

வலுவான லோக்பால் மசோதாவை கொண்டு வராவிட்டால் 2014 ஆம் ஆண்டில் நடைபெறும் பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும் இது போன்ற முடிவைத்தான் அவர்கள் சந்திக்க வேண்டியது இருக்கும். ஊழலை அம்பலப்படுத்திய 25 பேர் இதுவரை படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். இந்த பிரச்சினையில் அரசு புத்திசாலித்தனமாக செயற்படவில்லை. எனது போராட்டம் நாட்டு மக்களுக்காகவே தவிர அரசுக்கு எதிரானது அல்ல என்று கூறினார். (அ-2)

நடைபெற முடியாதது என்று உலகில் எதுவுமே இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

– மார்க் ட்வைன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தயவுசெய்து உரிமை கோராதீர்கள்! அது மிகப் பெரும் துரோகம்

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறியுள்ளது.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் ஒரு பெரும் புத்தகத்தையே வெளியிட்டு விடலாம். அந்த அளவிற்கு அது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறியதைப் பலர் வரவேற்றுள்ளனர்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளடங்குமாயினும்,

ஜெனிவாத் தீர்மான வெற்றியில் தங்களுக்கும் ஏதோ பங்கு இருப்பது போல கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருப்பதானது, வெற்றியின் மகிழ்ச்சியை உள்ளார்ந்தமாக அனுபவிப்பதற்குத் தடை செய்ததென்றே கூற வேண்டும்.

உண்மையில் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறியதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எள்ளளவேனும் பங்கு கிடையாது.

ஜெனிவாத் தீர்மானத்தை வரவேற்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் நேர்மையும், நீதியும் இருக்குமாயின் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த ஜெனிவாத் தீர்மானம்– அந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கு உதவியவர்களுக்கு பகிரங்கமாக நன்றி கூற வேண்டும்.

உண்மையில் இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறுவதற்கும் ஈழத்தமிழர்கள் பட்ட துயரம் கண்டு உலகம் முழுவதும் கண்ணீர் விடவும் செய்த மகா புண்ணியம் சனல் 4ஐயே சாரும்.

'இலங்கையின் கொலைக்களங்கள்– தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என்ற ஆவணப் படத்தை சனல் 4 வெளிப்படுத்தாமல் இருந்திருந்தால்,

வன்னியில் யுத்தம் நடந்ததா? என்று இந்த உலகம் கேட்டிருக்கும்.

எனவே சனல் 4 இற்கு ஈழத் தமிழ் இனம் தங்கள் சீவிய காலம் வரை நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பார்கள்.

இதற்கு மேலாக விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்கள் இராஜதந்திர ரீதியில் உலக அறிஞர்களின் ஆலோசனையைப் பெற்று, நாடுகடந்த தமிழீழத்தை உடனடியாகவே ஆரம்பித்தார்கள்.

அவர்கள் எடுத்த அந்த அதிரடியான நடவடிக்கையும் ஜெனிவாத் தீர்மானத்திற்கு மூல காரணமாயிற்று.

இதைவிட எங்கள் பாசத்திற்குரிய சகோதரன் சீமானின் அர்ப்பணிப்பு, தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் இறுக்கமான முடிபு என்பனவும் இந்தியாவை, இலங்கைக்கு பகையாக்கியது.

ஆகவே, ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறுவதில் பங்களித்தவர்களுக்கு தமிழ் இனம் நன்றியுடையதாக இருக்க வேண்டும்.

இதைவிடுத்து ஜெனிவாவுக்குப் போகப் பயந்தவர்கள், ஜெனிவாத் தீர்மானத்தில் தங்களுக்கு உரிமை இருக்கிறது எனக் கூறினால் அதற்கு தமிழ் மக்களிடம் இருந்து மொழிவழிப் பதில் அன்றி வேறுவிதமாகவே அதற்கான பதில் வழங்கப்படும்.

# ஆலயங்களின் வளர்ச்சிக்காக நெற்காணிகள் பகிர்ந்தளிப்பு

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் நடப்பாண்டுக்குரிய சிறுபோக நெற்செய்கையின்போது ஆலயங்கள் மற்றும் பாடசாலையின் வளர்ச்சிக்காக சிறுபோக நெற்செய்கைக் காணிகள் பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாகத் தெரியவருவது, கடந்த வாரம் நடைபெற்ற சிறுபோகக் கூட்டத்தில் மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் இக்காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி வன்னியை கடைசியாக ஆட்சிசெய்த பண்டாரவன்னியனின் பராமரிப்பின் கீழிருந்த வரலாற்றுப் புகழ்மிக்க சிவபுரம் சிவன் ஆலயத்தின் வளர்ச்சிக்காக 50 ஏக்கரும் கொல்ல விளாங்குளத்தில் உள்ள அன்னை வேளாங்கன்னி கிறிஸ்தவ ஆலயத்திற்கு 10 ஏக்கரும் பாண்டியன் குளம் பிள்ளையார் ஆலயத்திற்கு 10 ஏக்கரும் செல்வபுரம் விநாயகர் ஆலயத்திற்கு 10 ஏக்கரும் என நெற்காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலையான மு/மல்லாவி மத்திய கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதி ஒன்று இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காக 20 ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பொதுமக்களால் வழங்கப்பட்டுள்ள சிறுபோக காணிப்பங்குகள் அனைத்தும் விவசாயிகள் மத்தியில் ஏலத்தில் விடப்பட்டு அதன்மூலம் கிடைக்கும் நிதி மேற்குறித்த பொது நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்கள், அலுவலர்கள், கிராம சேவையாளர் மற்றும் கமக்கார அமைப்பினர், விவசாயிகள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

(அ-3-15)

# கட்டட இடிபாடுகளை வீதிகளில் கொட்ட வேண்டாம்

## வலி.கிழக்கு பிரதேசசபை அறிவிப்பு

வலி.கிழக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவில் கட்டட திருத்தவேலைகள் மேற்காள்ளப்பட்டு வருவதனால் பொதுமக்களால் அதன் இடிபாடுகள் பெருமளவில் பொது இடங்கள், வீதிகளில் கொட்டப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வீதிகள், பொது இடங்களில் கொட்டப்படுவதால் வீதிகளால் பயணம் செய்வோர் பாரிய அசௌகரியங்களை சந்திக்கவேண்டிய நிலை காணப்படுகிறது.


எனவே இவ்வாறு இடையூறு ஏற்படுத்தும் விதமாகக் கொட்டுவதனை மக்கள் தவிர்த்து தத்தமது பிரதேசசபை உப அலுவலகங்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் பிரதேசசபையால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என வலி. கிழக்கு பிரதேசசபைத்தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-7)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## தன்னை அறிந்தால் தவம்வேறில்லை

காலமு மில்லைக் கட்டுமில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லைச்
சால அறிந்த தவத்தி னோர்க்கே



# அடிமைத்தன வாழ்விற்கு முழுமையான விடுதலையை தரவல்லவர் இயேசுகிறிஸ்து

மனிதன் முழுமையாக வாழ வேண்டும்; குறைவில்லாமல் வாழவேண்டும்; மதிப்போடு வாழவேண்டும்; மாண்போடு வாழ வேண்டும். இதன்மூலம் இவ்வுலகிலே புனிதம் பிரதிபலிக்க வேண்டும் என்பதுதான் மனிதனைப் படைத்த இறைவனின் நோக்கமாகும். ஆனால் மனிதம் இன்று சிதைக்கப்படுகிறது, சீரழிக்கப்படுகிறது, முழு மனிதர்களாக வாழ்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன.

இன்றைய சூழலில் மனிதன் மனிதனை இனத்தால், வர்க்கத்தால், சாதியால், சமயத்தால், தொழிலால், பாலியலால் பிரித்துப்பார்க்கிறான். கொடிய யுத்தக்கருவிகளைக் கொண்டு சிதைக்க முனையும்போது அதனால் தானும் சிதைந்து போகிறான். இந்த அவல

## பரமபிதா காட்டிய பாதை

நிலையில் இருந்து மனிதனை மீட்டு அவனுக்கு உண்மை விடுதலையைக் கொடுத்து அவனுக்கு வாழ்வளிக்கக் கூடியவர் யார்?

பல்வேறுபட்ட கேள்விக்கணைகளோடும், சிந்தனைகளோடும், வாழ்வில் நாளும் துன்பங்களைச்சுமந்து போராட்டத்தின் உச்சியில் பயணிக்கும் எமக்கு உண்மை விடுதலையை தரவல்லவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே! திருவிவிலியம் ஒரு விடுதலை நூல் என்று கூறினால் மிகையாகாது. காலத்துக்குக்காலம் மனிதனின் வாழ்வில் விடுதலை நாயகனாக விளங்கிய இறைவனின் அற்புதச் செயல்களை எமக்கு படம்பிடித்துக் காட்டி நிற்கிறது விவிலியம். இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் பாராவோன் அரசனால் கொடுமைப்படுத்தப்பட்ட பொழுது அவர்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களை விடுவிக்க இறங்கி வந்தார். ''என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்...'' (வி.ப.3:7-8) இங்கு யாவே அவர்களுக்காக போராடும் இறைவனாக காட்சியளிக்கிறார். அடிமைத்தனங்கள், பாலைவனத்தில் அவர்கள் சந்தித்த இன்னல்கள், கடவுளுக்கு பிரமாணிக்க மற்ற நிலையில் வாழ்ந்த சந்தர்ப்பங்கள், அதற்குப் பெற்ற தண்டனைகள் இவ்வாறு வாழ்வில் ஒரு முழுமையற்று, சொந்த நாடற்று, இருக்க இல்லிடமின்றி,வழிபட ஆலய மின்றி நாடோடிகளாக அலைந்த அந்த மக்களுக்கு அன்று கடவுள் கொடுத்த விடுதலை, ஒரு பொருளாதார, சமூக, அரசியல், சமய அடிப்படையிலான முழு விடுதலையாகும்.

விடுதலை நாயகன் இயேசுவின் காலத்திலும் மக்கள் அடிமைகளாகவே வாழ்ந்தனர். பணித் தொடக்கத்திலேயே அவருடைய இலட்சியத்தை வெளியிட்ட அவர் (லூக் 4: 18-19, ஏசா 61: 1-2) மக்கள் மீது அக்கறை கொண்டவராய், அக்கால சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளை நன்கு அறிந்து மக்களின் துன்பத்திற்குக் காரணமான அநீத அமைப்புக்களை வன்மையாகக் கண்டித்தார்.

தெளிவான சிந்தனையும் கூர்மையான தொலைநோக்கும் பரந்த ஞானமும் நேர்மையும் சுதந்திரமும் உள்ளவராக புதியதொரு சமுதாயத்தைப் படைக்கத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். அன்று நிலவிய சமூக அரசியல் ஆதிக்கச் சக்திகளையும் சட்டம், சமூக, சமயப் பழக்கவழக்கங்களைப் பற்றியும் துணிச்சலாக விமர்சித்தார். அன்று நிலவிய அடக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் முற்றுப்புள்ளிவைத்து மனித மாண்பு, மனித நேயம், மனித சுதந்திரம், நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இறையரசு மதிப்பீடுகளுக்காக தன்னை வரலாற்று நிகழ்ச்சிகளோடு கரைத்துக் கொண்டார்.

இன்று எமது நாட்டில் உள்ள சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகளில் மக்களின் நிலையறிந்து செயற்பட திருச்சபையில் எல்லா நிலையிலும் உள்ளவர்கள் அவரவர் பணிக்கென அழைக்கப்படுகிறோம். போரின் வடுக்களையும் அதன்வலிகளையும் தங்கள் வாழ்விலே சுமந்தவர்களாக,நாளாந்தநிகழ்விலும்தன்நிழலையே அனுபவிப்பவர்களாகவிருக்கும் எம் மக்கள் தங்கள் வாழ்வில் அனைத்தையும் இழந்து அடிமைகளாக வாழ்வில் ஒடுங்கிப்போய் தங்களை இந்த நிலையில் இருந்து விடுவிக்க யார் வருவாரென கதறுகின்றபோது எங்களின் பதில் என்ன?



## அருட்சகோதரர் ரமேஸ் அ.ம.தி

எத்தனை கொடிய அவலங்கள் வந்தாலும் அவற்றில் இருந்து எம்மைக் காத்து அடிமைத்தன வாழ்விலிருந்து எம் எல்லோருக்கும் முழுமையான விடுதலையை தரவல்லர் நம் ஆண்டவர் இயேசு. கிறிஸ்துவே. இதனை நாம் எமது விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தி அதேவிசுவாச சத்தியத்தை எமது மக்களுக்கும் கொடுக்கவேண்டும். " நீதிக்காக உழைப்பதும், உலகை மாற்றியமைப்பதில் திருச்சபை ஈடுபடுவதும் நற்செய்தி அறிவிப்பின் இன்றியமையாத உடற்கூறாக இருப்பதை நாங்கள் உணருகின்றோம்" என்ற திருத்தந்தை 6ஆம் பத்திநாதரின் செய்தியை முன்னுதாரணப்படுத்தி எமது செயலால் எமது விசுவாச வாழ்விற்கு அர்த்தம் கொடுக்க வேண்டும்.




# நோய் நீங்க

## பாத பராமரிப்பு...



கால்பாதங்களுக்கு முறையான மசாஸ் கொடுத்தால் பல நோய்கள் வராமல் பார்த்துக்கொள்ள முடியும். குறிப்பாக காலையில் எழுந்ததும் காலை உயரத்தில் வைத்துக் கால்களை தேய்த்தும் எண்ணெய் விட்டு அழுத்தியும் மசாஜ் கொடுக்க வேண்டும்.

1. முதலில் பெருவிரல் பகுதியில் அழுத்தத் தொடங்கி பின்னர் ஒவ்வொரு அங்குலமாக அழுத்தி மசாஜ் செய்ய வேண்டும். இரண்டு கைகளிலும் எண்ணெயை நன்றாக சூடு பறக்க ஐந்து நிமிடம் தேய்த்த பின் வெதுவெதுப்பான நீரில் முட்டி வரை 5 நிமிடத்திற்கு வைக்க வேண்டும்.


2. காலை வெளியே எடுத்துக் குளிர்ந்த நீரில் 5 நிமிடம் வைக்க வேண்டும். இந்த பயிற்சியால் பல வியாதிகள் நமக்கு குணமடையும். கைகள் வெந்நீரிலும் குளிர்ந்த நீரிலும் இருக்கும் போது கைவிரல்களை மூடியும் திறந்தும் பயிற்சி செய்ய வேண்டும்.

3. கைவிரல்கள் உள்ளங்கைளில் நன்றாகப்படும் விதத்தில் கைகளை மூடி மூடி திறக்க வேண்டும். இப்படி வாரத்திற்கு 3அல்லது 4 நாட்கள் செய்து வந்தால் பல நோய்கள் நம்மை நெருங்காது. உடம்பில் இருக்கும் சிலநோய்களும் நம்மை விட்டு நீங்கிவிடும்.

கால் பாதங்களில் நல்லெண்ணெய் அல்லது ஆமணக்கு எண்ணெய் தடவி உஷ்ணப்படுத்தலாம், கால்களின் மேல்பகுதியையும் அழுத்தித்தேய்க்க வேண்டும், சிறு குன்றுகளின் மீது ஏறி இறங்குவது பல நோய்களை நீக்கும், எல்லா நோய்களையும் கால் பாதங்களைத் தேய்ப்பது, அழுத்துவது, உஷ்ணப்படுத்துவது, மசாஜ் செய்வதன் மூலம் சரி செய்ய முடியும், ஜலதோஷம் வந்தால் கால் விரல்களை நன்றாக நீவி விட வேண்டும், உள்ளங்காலில் ஒரு சிறிய மூங்கில் அல்லது கை மூட்டினால் அழுத்தினால் மூட்டுவலி நீங்கும், வலது காலின் கட்டை விரலுக்கு கீழ் உள்ள மேலான பகுதியை நன்றாக அழுத்தித் தேய்க்க வேண்டும். இப்படி செய்வதால் கண் நோய்கள் நீங்கும், வலது காலின் நடுவில் நரம்பு மண்டலம் என்று கூறுவார்களே அந்த இடத்தில் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் அழுத்தினால் நரம்புத்தளர்ச்சி குணமாகும், முழங்காலில் வலி இருந்தால் அந்த இடத்தை நன்றாக அழுத்தி மசாஜ் போல் செய்தால் வலி போகும். இந்த மாதிரியான மசாஜ் செய்ய முடியாதவர்கள் நடைப்பயிற்சி செய்தால் போதும், குறிப்பாக நடைப்பயிற்சியின் போது பாதணி , சப்பாத்து எதுவும் அணியக்கூடாது, வெறுங்காலில் நடக்கும் போது சுத்தமான அதாவது கழிவுகள், எச்சில்கள் இல்லாத மைதானங்களில் நடந்தால் நல்லது.



# 2-ம் நாள் முடிவில் தென்னாபிரிக்கா ஆதிக்கம்



நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

முதல்நாள் ஆட்டம் போன்றே மதிய போசன இடைவேளைவரை போட்டி ஆரம்பிக்க முடியாத நிலை காணப்பட்டது.

அதன்பின்னர் போட்டி ஆரம்பிக்கப்பட்டபோது 2 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி தொடர்ந்தும் சிறப்பாக ஆடியது.

போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டியின் 2 ஆம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 2 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அல்விரோ பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 96 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களையும் பெற்று களத்தில் காணப்படுகின்றனர்.

நேற்றைய நாளில் 37 ஓவர்கள் மாத்திரமே வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## சமனிலையை...

சாத்தியமான முன்னோக்கிய வழியை கண்டறிவதற்காக இலங்கைப் பிரதிநிதிகளுடன் நெருக்கமாக தொடர்பிலிருக்குமாறு எமது தூதுக்குழுவினருக்கு நான் அறிவுறுத்தியிருந்தேன். இப் பிரேரணையில் சமனிலையான மொழிப் பிரயோகத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்துவதில் எந்தவொரு முயற்சியையும் விட்டுவைக்கவில்லை என்பதை மேன்மைதங்கிய நீங்கள் அறிந்திருப்பீர்கள் என அக்கடிதத்தில் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தனக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடிதம் எழுதியதையும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சுட்டிக் காட்டியுள்ளார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையிலான, அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் பொதியானது பல பிரச்சினைகளுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கு இட்டுச் செல்வதுடன் இலங்கையின் அனைத்துப் பிரஜைகளும் அவர்கள் எந்த இனத்தவராயினும் நீதியையும் கௌரவத்தையும் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் காண்பதற்கான சூழலையும் உருவாக்கும் என்பது தீர்மானமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் ஆர்வம் கொண்டுள்ளமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பல்வேறு இந்திய நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அனைத்து சமூகங்களும் செழிப்படையக் கூடிய உறுதியான பாதுகாப்பான, சுபீட்சமான சூழலை இலங்கையில் ஏற்படுத்தல் மற்றும் இந்திய-இலங்கை உறவுகளை மேலும்மேலும் வளர்ந்து வலிமையாக்குவதற்கான பொதுநோக்கத்திற்காக இந்தியா தொடர்ந்தும் செயற்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

இலங்கையிலும், இந்தியாவிலும் பல அப்பாவி உயிர்களைப் பலி கொண்ட நீண்ட மோதல்கள் கடந்த 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது.

நியாயமான தேசிய நல்லிணக்கத்துக்கும், இலங்கையின் அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டுக்கும் வழிவகுத்து கொடுத்ததாக கூறியுள்ள மன்மோகன் சிங், அதில் கணிசமான முன்னேற்றமும் கண்டுள்ளதாக இலங்கையைப் பாராட்டியுள்ளார்.

குறிப்பாக, இலங்கை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த முனைந்துள்ள ஜனாதிபதியின் நோக்கத்தையும் பாராட்டுவதாக மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

---

## வடக்கு-கிழக்கு...

கூட்டமைப்பினர் பேசி வருகின்றனர். கிழக்கு மாகாணம் தற்போது சகல துறைகளிலும் துரிதமான வளர்ச்சியடைந்து வருகின்றது. எமது மாகாணத்தின் கல்வித்துறையும் இன்னும் சிறந்ததாகவும் துரிதமாகவும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எமது நோக்கம். இதன் அடிப்படை யிலேயே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் பேசுவதற்காக அதன் தலைவர் சம்பந்தனுக்கு நான் கடிதம் அனுப்பி 3 மாதங்களாகின்றன. இன்னும் பதில் கிடைக்கவில்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உப செயலாளர் செல்வராசா நிகழ்வொன்றில் பேசுகையில் விரைவில் இதற்கான பதில்கிடைக்கும் எனக் கூறினார். அவர் இதனைக் கூறியும் ஒரு மாதம் கடந்து விட்டது. இன்னமும் எந்தப் பதிலும் இல்லை.

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசுவதற்காக அனுப்பப்பட்ட கடிதமொன்றுக்கு பதில் கடிதம் அனுப்ப முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்காக எதனைச் செய்யப் போகின்றனர்?

வடக்கைச் சேர்ந்தவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை தாழ்த்தப்பட்டவர்களாக பார்க்கின்ற மனப்பாங்கு இன்னும் மாறவில்லை.

நான் 8 வருடங்களுக்கு மேல் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தபோது பல அனுபவங்களை சந்தித்திருக்கிறேன். மட்டக்களப்பான் மடையன் என்றும் மந்திரவாதிகள் என்றும் சொல்வார்கள்.

நாம் அவர்கள் பக்கம் இருந்தால் எம்மை நல்லவர்கள் என்று சொல்வார்கள். ஏதாவது அவர்களுக்கு எதிராக சொல்லிவிட்டால் துரோகி என்பார்கள். போராட்டகாலங்களில் பாரிய சரித்திர வெற்றிகளை பெற்றுக்கொடுத்தவர்கள் கிழக்கு மாகாணப் போராளிகளே. அவ்வாறான சரித்திர வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த போராளிகளை வெருகலில் படுகொலை செய்தார்கள்.

கடந்த கால கசப்பான அனுபவங்கள் எப்படியிருப்பினும் மாகாண சபை முறைமை மூலம் கிழக்கு மாகாணம் துரிதமாக அபிவிருத்தியடையவேண்டும். எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே எமது எண்ணம். இதற்கு இணங்க மக்களும் உண்மைகளை உணர்ந்து சிந்தித்து செயல்பட வேண்டும் என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

---

## ஜெனிவாவில்...

இக் கூட்டத்தொடரில் கலந்துகொண்ட இலங்கை மனிதவுரிமை செயற்பாட்டாளர்களுக்கு ஒரு போதும் இல்லாத வகையில் மிரட்டல்களும், பயமுறுத்தல்களும் விடுக்கப்பட்டதாக ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளரின் பணியகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளரின் பேச்சாளர் ரூபேர்ட் கொல்வின், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் வரலாறு இதுவரை கண்டிராத வகையில், மனிதவுரிமை செயற்பாட்டாளர்களுக்கு அந்தளவு அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் விடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணையத்தளங்கள் ஊடாக அவதூறான செய்திகள் அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றன.

மனிதவுரிமை செயற்பாட்டாளர்களான பாக்கியசோதி சரவணமுத்து, நிமல்கா பெர்ணான்டோ, சுனிலா அபயசேகர போன்றோரைப் பற்றி அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்ட கருத்தையும் சில நிமிடங்களுக்கு முன்னர்தான் வாசித்தேன்.

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளாலும், செய்தியாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களாலும் தொடர்ச்சியாக எழுதப்பட்டுவரும் மிக மோசமான கட்டுரைகளின் ஒரு தொடர்ச்சியாகவே இத்தகைய சம்பவங்களையும் கருத முடிகிறது.

ஏனெனில் ஐ.நா.மனிதவுரிமை அமைப்புக்களில் இருக்கும் நாம் ஊடக சுதந்திரத்தை மிகவும் பலமாக ஆதரிப்பதுடன், அதன் தேவையை முழுமையாக நம்புபவர்கள்.

ஆனால் முன்னர் குறிப்பிட்டவர்களால் எழுதப்பட்டுவரும் இத்தகைய கட்டுரைகளில் பெரும்பாலானவை வன்முறையை தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இதன் விளைவுகளை அதன் வாசகர்கள் எழுதியிருக்கும் பின்னூட்டத்திலிருந்து நீங்கள் பார்க்க முடியும்.

இத்தகைய மனிதவுரிமை செயற்பாட்டாளர்களின் வீடுகளை எரிக்க வேண்டும் எனவும், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் கொல்லப்படவேண்டும் எனவும் சிலர் நேரடியாகவே தெரிவிக்கின்றார்கள். இத்தகைய சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகளை ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு கண்காணித்து வருகிறது.

இத்தகைய மனிதவுரிமை விவகாரம் தொடர்பிலான எமது கவலைகள் குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பேச்சாளர் ரூபேர்ட் கொல்வின் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

---

## பொலிஸ் வான்...

கொண்டு சென்று வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் அங்கு அவர் பலியானதாகவும் கூறப்பட்டது. எனினும் அவர் அடையாளம் காணப்படவில்லை. (எ-85)

---

## இலங்கை மீதான...

இடையிலான ஒரு போராட்டமாக கருத முடியாதென குறிப்பிட்ட அவர் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தவறான திசையில் பயணிப்பதாக சர்வதேச சமூகம் கருதுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அமைதியான முறையில் விமர்சனங்களை முன்வைப்போர் பகிரங்கமாக அச்சுறுத்தப்படுவது குறித்தும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இத்தீர்மானத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்த சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் சாம் சபாரி வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு மனிதவுரிமைகள் கண்காணிப்பகமும் கண்டனம் வெளியிட்டுள்ளது. பொறுப்புக் கூறுவது தொடர்பில் சர்வதேச சமூகத்தின் வலுவான ஆர்வத்தையே இலங்கை மீதான தீர்மானம் வெளிப்படுத்தி நிற்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய வகையில் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்பதன் வெளிப்பாடே இந்தத் தீர்மானம் எனவும் மனித வுரிமை கண் காணிப்பகத்தின் ஜெனிவா பிரதிநிதி ஜுலியட் டிரிவிரோ தெரிவித்துள்ளார். (எ-1)

---

## காளை மாட்டை...

சுமார் ஆயிரத்து 250 கிலோக்கிராம் எடையுடைய காளை மாட்டின் இறைச்சியை விற்பனை செய்வதற்காக துண்டுபிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதுடன், அந்த காளை மாட்டை பொதுமக்கள் பார்வையிடுவதற்காக ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

ஐரோப்பிய நாடொன்றிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நல்லினக்காளை மாட்டை வெட்டுவது, மாட்டிறைச்சியை விற்பனை செய்வதற்காக சிவபூமி என்று போற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் துண்டுபிரசுரம் வெளியிடுவது தொடர்பில் நேற்றைய தினம் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன்,

காளைமாடு கொல்லப்படுவதை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டிருந்தது. இதனையடுத்து நேற்றைய தினம் அந்தண சிவாச்சாரியார்கள், சமயப் பிரதிநிதிகள் மற்றும் ஜீவகாருணியத்தில் கரிசனை கொண்டோர் எனப் பலரும் இது தொடர்பில் யாழ். அரச அதிபர், யாழ்.மாநகர சபை முதல்வர், யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டனர்.

இதனையடுத்து யாழ்.பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி சமன் சிகேரா, குறித்த காளை மாடு வெட்டப்படுவதற்கு தடை விதித்தார்.

அத்துடன் தற்போது கொட்டடியிலுள்ள யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான கொல்களத்தில் கட்டப்பட்டுள்ள இக் காளைமாட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காளை மாட்டின் எதிர்காலம் குறித்து சமய, சமூகத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு முடிபெடுக்கப்படும் எனவும் அறியப்படுகின்றது. (நு)

---

## இந்தியக் குழு...

எதனையும் தெரிவிப்பது கடினம் என்க் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் உறவுகளைப் பேணும் மத்திய வெளிவிவகார அமைச்சின் தீர்மானத்தைப் பொறுத்து மத்திய அரசு இது தொடர்பில் முடிபு எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் சுஸ்மா ஸ்வராஜ் தலைமையிலான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவே அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனிடையில் 5 மாநில சட்டசபைத் தேர்தல் இடம்பெற்றதால் இவர்களின் இலங்கைக்கான விஜயம் பிற்போடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலங்கை அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததும் இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு விரைவில் இலங்கை செல்லும் என நம்புவதாக ஞானதேசிகன் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கியதை அடுத்து, இந்தியாவுக்கு எதிராக தேசியவாதிகள் போர்க் கொடி தூக்கியமை தெரிந்ததே. (எ-11)

---


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

தோற்றம் 12 . 05 . 1936



மறைவு 25 . 02 . 2012

அமரர் திருநாவுக்கரசுமுதலி புனிதவதி

அமரர் திருநாவுக்கரசுமுதலி புனிதவதி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 26.03.2012 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அன்றைய தினம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:- இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இறுதி நிகழ்வில் கலந்து கொண்டும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகள்

ஐயனார் கலட்டி
பருத்தித்துறை

குடும்பத்தினர்

(C-6166)

## அவுஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா இங்கிலாந்தில் கற்பதற்குரிய விசா

A/L சித்தி மட்டும் போதுமானது.
ஆங்கிலப் பரீட்சை தேவையில்லை.

ஆலோசனைகளுக்கு:

**திசைகாட்டி** (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்



37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0212219016

115, A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே.: 0212285544

23, 1/3 மகேஸ்வரி லேன், கொழும்பு -06. தொலைபேசி : 0112366925

மெல்போர்ன் அவுஸ்திரேலியா
Land Line : 0061390437100

(8004)



## குமரகுரு ஆடை தொழிற்சாலைக்கு பணியாளர் தேவை

1. ஜூகி மெசின் இயக்குனர்கள்/
2. உதவியாளர்கள்
3. துணி வெட்டுபவர் (மெசின் மூலம்)
4. மெசின் திருத்துபவர்கள்
5. உ/தி மேற்பார்வையாளர் (Production Supervisors)

நேர்முக தேர்வுக்கான காலம்:-
25.03.2012 ஞாயிறு காலை 10.00 - 2.30 வரை
26.03.2012 திங்கள் காலை 10.00 - 2.30 வரை
ஆகிய தினங்களில் நேரில் வரவும்

இடம்:-
**குமரகுரு மல்ரி சொப்**
**A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.**

(C-6163)



## வாடகைக்கு விடப்படும்



1 மணித்தியாலத்திற்கு
4000/-

தொடர்புகளுக்கு:
**0771919328**

(8003)



## காணி விற்பனைக்கு

சித்தன்கேணி மகா கணபதி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில், சிறந்த சுற்றாடலில் அமைந்துள்ள, வீடு கட்டுவதற்கு உகந்த, 2 1/2 ("தம்பைசிட்டி") நில. பரப்பு காணி நிலம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 0779010701**

(8001)



புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு...

## Jet D Express Courier Service



உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

Germany Over 10Kg - 800/=
France Over 10Kg - 850/=
UK Over 5Kg - 1000/=
UK Over 10Kg - 750/=

Germany 1kg - 900/=
UK 1kg - 500/=
Swiss 1kg - 500/=
France 1kg - 500/=
Canada 1 kg - 600/=

*.25kg மேற்பட்ட பொருட்களுக்கு 450/= அறவிடப்படும்

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்

Note : *.கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும்
*.வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை, (தனம் ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No.77E, Manning Place, Wellawatta, Colombo 6, T.P:- 0112363873 0776509909


# முரண்பாடு இல்லாத சமாதானம்...

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் யாழ்.கச்சேரி வீதியிலுள்ள எக்ஸ்போ தனியார் விடுதியில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை சந்தித்து கலந்துரையாடிய இந்தக் குழுவினர் பின்பு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினையும் சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் காலை 9 மணியளவில் கனேடிய நாடாளுமன்ற குழுவினர், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் சமாதானத்திற்கும் நல்லெண்ணக்கத்திற்குமான குழுவில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, குரு முதல்வர்களான ஜெ.ஜெயவீரசிங்கம், ஏ.எக்.ஜெயசேகரன் மற்றும் இந்தக் குழு உறுப்பினர்களான எஸ்.பரமநாதன், கே.பூரணச்சந்திரன், ஆர்.ஜெயசேகரன், ந.சிவரட்ணம், என்.ராஜாராம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அதன் செயலாளர் எஸ்.பரமநாதன் கூறியது,

இந்த நாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழல் தொடர்ந்து நிலை பெற்றிருக்க வேண்டும். சமாதானம் தான் வேணும் என்ற நிலைப்பாட்டிலிருந்து நாம் ஒரு போதும் மாறுபட மாட்டோம்.

மூவின மக்களும் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால் கடந்த காலங்களில் இனங்களுக்கு இடையில் இடம் பெற்ற யுத்தம் போன்று மதங்களுக்கு இடையில் யுத்தம் வரக்கூடியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமாதானம் வந்த பின்பும் பயங்கரவாதச் தடைச் சட்டம் நடைமுறையில் இருப்பது போன்ற தோற்றப்பாடு உள்ளது.

ஓமந்தை சோதனைச் சாவடியினால் போக்குவரத்து மேற்கொள்வது பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது. முதியவர்கள் வாகனத்தில் இருந்து இறக்கி சோதனைக்குட்படுத்தப்படுவதோடு நடக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

சமாதானம் ஏற்பட்ட பின்பும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்வதற்கு என்ன காரணம்? ஒரே நாடு ஒரே மக்கள் எனக் கூறுவது மட்டும் தான் அரசாங்கத்தின் வேலையா? அதை நடைமுறைப்படுத்துவது எப்போது?

வடக்கில் ஜனநாயகம் இன்னும் கல்லுமுள்ளு பாதையில் தான் செல்கின்றது.

மறைமுகமான நிகழ்ச்சித் திட்டத்தில் செயற்படுவதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

யுத்தத்தின் போது தனது கணவன் உயிரிழந்துள்ளாரா? இல்லையா? எனத் தெரியாமல் தமது கழுத்தில் தொங்கும் தாலியை கழுத்தில் வைத்திருப்பதா இல்லையா எனத் தெரியாமல் பல இளம் குடும்பப் பெண்கள் அங்காலாய்த்து வருகின்றனர்.

இது தவிர பல இளம் விதவைகள் இங்குள்ளனர்.

எனவே சமாதானம் இலங்கையில் ஏற்பட்டுள்ள தென்பதை உலகறியச் செய்ய வேண்டுமானால் முரண்பாடு இல்லாத சமாதானத்தை இலங்கையில் உருவாக்க வேண்டும் என சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினர் கனேடிய நாடாளுமன்ற குழுவினரிடம் எடுத்துரைத்ததாக பரமநாதன் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு இந்த விடயங்களை உள்ளடக்கியதான மகஜர் ஒன்றையும் கனேடிய நாடாளுமன்ற குழுவினரிடம் தாம் கையளித்ததாகவும் அவர் தெரிவித்தார். (எ-6)


## தவறிவிட்டது

யாழ்.பஸ் நிலையப் பகுதியில் ஜெ.ஜெயப்பிரகாஷ் என்பவருடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி கடனட்டைகள், அடகு பற்றுச் சீட்டுக்கள் என்பன அடங்கிய பிறவுண் நிற பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது வலம்புரி பத்திரிகை அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 0778176051, 0772918545

(7800)


# திடீர் காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காய்ச்சலினால் மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் நேற்று திடீரென உயிரிழந்துள்ளான்.

அரியாலை மணியந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த கி.விதுஷன் என்ற 3 வயதுச் சிறுவனே நேற்று மதியம் 12 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தான்.

மேற்படி சிறுவனுக்கு 8 நாட்களுக்கு முன்பு காய்ச்சல் ஏற்பட்டதாகவும் அப்போது புங்கன்குளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சிறுவன் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று மீண்டும் சிறுவனுக்கு காய்ச்சல் ஏற்பட்டதனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் சிறுவன் மரணமடைந்தான். (எ-6)


## அங்கயர்கன்னி திருமணசேவை

உள்நாட்டு, வெளிநாட்டு, இந்து, கிறிஸ்தவ மணமகன், மணமகளை நீங்கள் எதிர்பார்க்கின்றபடி திருமணம் செய்து தரப்படும். நீங்கள் விரும்பிய மணமகன், மணமகளை திருமணம் செய்யும் உங்கள் திருமண கனவுகளை நிறைவேற்ற தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: -
அங்கயர்கன்னி திருமணசேவை
புன்னாலை கட்டுவன், கரவெட்டி
T.P.:0774766339, 0774766340, 0778733404

(7799)



## வாகனம் வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் வெளிநாட்டு நிறுவனத்தின் தேவைக்கு குளிரூட்டப்பட்ட பிரயாண வாகனம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 0773-144861 அல்லது 021 225 5137

(7796)



**LORENTZ** GERMANY




## நீர் இறைக்கும் இயந்திரம்

சூரிய சக்தியால் இயங்கும் துருப்பிடிக்காத LORENTZ பம்பித்தொகுதிகள்
விவசாய பண்ணைகளுக்கு, விடுமுறை விடுதிகளுக்கு, பாடசாலைகளுக்கு மற்றும் கிராம மக்களுக்கு



- மண்ணெண்ணை, டீசல், மின்சாரம் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கு முற்றுப்புள்ளி.
- உங்கள் விவசாய வேலைத்திட்டத்தின் வர்த்தகத்தின் இலாபம் அதிகரிக்கும்.
- இலவசமாக மின்சாரத்தையும் பெற்றுக்கொள்ள இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்.
- 134 வருடம் அனுபவம் வாய்ந்த நிறுவனத்தினால் 20 வருட உத்தரவாதம் வழங்கப்படுகின்றது.

மாதாந்தம் 4,300/= உடன் பெற்றுக்கொள்ளலாம்

Ataaspirations - 011 2722990

கிளிநொச்சி - யோகன் : 077 5335088

இறக்குமதி செய்து விநியோகிப்போர்
**E.B. CREASY & CO. PLC**
98, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
Tel: 011 2478770-9 மனோகரன்: 0777 415338
New Asian Center, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் : 077 8249949


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.